*13*

# சபைக்கு கிறிஸ்து அளித்துள்ள வரங்களைப் புரிந்து கொள்ளுதல்

## (4:7-16)

*முதல் நூற்றாண்டில், புதிய ஏற்பாடு எழுதப்பட்ட காலக்கட்டத்தில், குழந்தைப் பருவத்தில் இருந்த சபை முறையாக செயல்பட விசேஷித்த வரங்களின் உதவி தேவைப்பட்டது. புதிய ஏற்பாடு நிறைவு பெற்ற போது, இந்த விசேஷித்த வரங்கள் இதற்கு மேலும் தேவையிராததால் அது ஓய்ந்து போகும் என்று சொல்லப்பட்டது.*

*இந்த விசேஷித்த வரங்கள் நேரடிப் பொருளில் "ஆவிக்குரியவைகள்" என்று அழைக்கப்பட்டது (pneumatikos), அவைகள் 1 கொரிந்தியர் 12:1-31 ல் தனித்தனியாக வரிசைபடுத்தப்பட்டுள்ளது. அவைகள் சபையின் ஐக்கியத்துக்கும் பக்திவிருத்திக்கும் பிரயோஜனம் உண்டாகும்படி கொடுக்கப்பட்டது; ஆனாலும் கொரிந்தியர்கள் அவைகளை பிரிவினைகளுக்கு ஏதுவாக்கினார்கள், அதுவே பவுல் அவைகளைப் பயன்படுத்த வேண்டிய ஒழுங்கு முறைகளைச்சொல்லி செயலூக்கம் கொடுக்க வைத்தது.*

*"ஆவிக்குரியவைகளெல்லாம்" மற்றவர்கள் மீது கைகளை வைப்பதன் மூலம் அப்போஸ்தலர்களால் கொடுக்கப்பட்டது. நடபடிகள் 6:1-6ல், எருசலேம் சபையில் ஏழுபேர் விசேஷ ஊழியத்திற்காக தேர்ந்தெடுக்கப்பட்டனர், அப்போஸ்தலர்கள் "அவர்கள்மேல் தங்கள் கைகளை வைத்தார்கள்." இந்த ஏழுபேரில் ஒருவர் ஸ்தேவான், அவர் "... ஜனங்களுக்குள்ளே பெரிய அற்புதங்களையும் அடையாளங்களையும் செய்தார்" (நடபடிகள் 6:8). மற்றொருவர் பிலிப்பு, சமாரியாவில் அவர் பிரசங்கித்த செய்தியை உறுதிப்படுத்த அப்பொழுது அவர் அடையாளங்களை நடப்பித்தார் (நடபடிகள் 8:6). சமாரியாவிலிருந்த ஜனங்கள் கிறிஸ்தவர்களான போது, எருசலேமிலிருந்த அப்போஸ்தலர்கள் அதைக் கேள்விப்பட்டார்கள், அந்த ஜனங்கள் மேல் கைகளை வைத்து ஆவிக்குரிய வரங்களைக் கொடுக்கும்படி பேதுருவையும் யோவானையும் அவர்கள் சமாரியாவுக்கு அனுப்பி வைத்தனர். அந்த ஜனங்களுக்கு ஏன் பிலிப்பு வரங்களைக் கொடுத்து அப்போஸ்தலர்கள் சமாரியாவுக்குச் சென்ற பயணத்தை மிச்சப்படுத்தவில்லை? இதற்கான எளிமையான பதில் அப்போஸ்தலர்கள் மட்டுமே மற்றவர்களுக்கு வரங்களை கொடுக்க முடிந்தது.*

*பவுல் 2 தீமோத்தேயு 1:6 ஐ எழுதின போது ஆவிக்குரிய வரங்களைக்*

குறித்துப் பேசினார், "*உன்மேல் என் கைகளை வைத்ததினால்* உனக்கு உண்டான தேவவரத்தை நீ அனல் மூட்டி எழுப்பி விடும்படி உனக்கு நினைப்பூட்டுகிறேன்" (வலியுறுத்தல் சேர்க்கப்பட்டது). அவர் இந்த விசேஷித்த திறமைகளை 1 தீமோத்தேயு 4:14ல் குறிப்பிட்டு மேலும் பேசியதாவது: "மூப்பராகிய சங்கத்தார் உன்மேல் கைகளை வைத்த போது … உனக்கு அளிக்கப்பட்ட வரத்தைப் பற்றி அசதியாயிராதே." "மூப்பராகிய சங்கத்தார்" என்பது சபையின் மூப்பர்களைக் குறித்துச் சொல்லப்படுகிறது. இதினால் மூப்பர்களும் இந்த வரங்களைக் கொடுக்கலாம் என்று பொருளா? தீமோத்தேயுவுக்குக் கொடுக்கப்பட்ட வரம் "என் கைகளை வைத்ததினால்" கொடுக்கப்பட்டது என்று சொல்லுவது கிரேக்க முன்னிடைச் சொல்லாகிய (*dia*), பயன்படுத்தப்பட்டுள்ளது, அதன் பொருள் "ஒன்றிலிருந்து புறப்பட்டு வருதல்," "ஒரு செயலின் கருவி அல்லது பொருள்."[1] எப்படியிருப்பினும், "மூப்பராகிய சங்கத்தார் கைகளை வைத்துக் கொடுத்த" தீமோத்தேயுவின் வரம் பற்றி பவுல் பேசின போது, அவர் பயன்படுத்தின சொல் "ஒன்றோடு இணைந்து" அல்லது "சேர்த்துக்கொண்டு" வருதலைக் குறிக்கிறது.[2] தீமோத்தேயுக்கு *பவுலால்* அல்லது பவுல் *மூலமாக* வரம் கொடுக்கப்பட்டது; மூப்பர்கள் கைகளை வைத்தது *வரத்துடன் சேர்த்து வந்தது*, இதை அதி கப்பட்சமாக கைகுலுக்குதல் அல்லது "தேவன் உங்களை ஆசீர்வதிப்பார்" என்று சொல்லுவது போன்றது. ஆவிக்குரிய வரங்களெல்லாம் அப்போஸ்தலர்களாலே மட்டுமே கொடுக்கப்பட்டது.

எவ்வளவு காலத்துக்கு வரங்கள் கொடுக்கப்பட வேண்டியிருந்தது? அப்போஸ்தலர்களுடைய கைகளினாலே கொடுக்கப்பட்டதாலும், அவர்களிடம் பெற்றவர்கள் வேறுயாருக்கும் தங்களிடமிருந்து கொடுக்கக் கூடாமலும் இருந்தபடியால், கடைசி அப்போஸ்தலன் மரித்தபின் இந்த வரங்களுக்கு தேவையும் இருக்கவில்லை, கொடுக்கவும் அப்போஸ்தலர் இருக்க வில்லை. இந்த நேரத்தில், புதிய ஏற்பாடு நிறைவு பெற்று குழந்தை பருவத்தில் இருந்த சபைக்கு விசேஷித்த வரங்களாகக் கொடுக்கப்பட்டு வந்த இடத்தில் கொடுக்கப்பட்டது.

சபைக்கு கிறிஸ்து கொடுத்த வரங்களெல்லாம் "ஆவிக்குரியவைகளல்ல," அவைகள் அற்புதமானவைகளும் அல்ல. குறிப்பிடப்பட்ட வரங்களோடே கூட, சில சாதாரண தொடர்ச்சியாக இருக்கத் தக்க சில வரங்களை சபைக்கு கிறிஸ்து கொடுத்தார்.

## வெற்றிகொள்ளும் கிறிஸ்து வரங்களை அளித்தார் *(4:7-10)*

***7கிறிஸ்துவினுடைய ஈவின் அளவுக்குத் தக்கதாக நம்மில் அவனவனுக்குக் கிருபை அளிக்கப் பட்டிருக்கிறது. 8ஆதலால் "அவர் உன்னதத்திற்கு ஏறி, சிறைப்பட்டவர்களைச் சிறையாக்கி, மனுஷர்களுக்கு வரங்களை அளித்தார்" என்று சொல்லியிருக்கிறார். 9(ஏறினார் என்பதினாலே அவர் அதற்கு முன்னே பூமியின் தாழ்விடங்களில் இறங்கினார் என்று விளங்குகிறதல்லவா? 10இறங்கினவரே எல்லாவற்றையும் நிரப்பத்தக்கதாக, எல்லா வானங்களுக்கும்***

*மேலாக உன்னதத்திற்கு ஏறினவருமாயிருக்கிறார்).*

***வசனங்கள் 7, 8.*** *எல்லா வரங்களும் ஒட்டு மொத்தமாக* ***கிறிஸ்துவின் வரங்கள்*** *என்று சொல்லப்பட்டன (4:7). சபைக்குத் தேவை எதுவோ அதை கிறிஸ்து கொடுத்தார். அது ஒருவருக்கும் தகுதி அடிப்படையிலோ அல்லது யாரும் சம்பாதித்துக் கொண்டதாகவோ எண்ணாதபடிக்கு, அவை கிருபை வரங்கள் என்றழைக்கப்பட்டன, ஆனால் கிறிஸ்துவால் இலவசமாக சபைக்கு அது கொடுக்கப்பட்டது.*

*இந்த வரங்களைக் குறிப்பிட்ட பவுல் அதை மிகப் பெரிய வெற்றியுடன் சம்பந்தப்படுத்தி விளக்கப்படுத்துகிறார். வசனம் 8ல் மேற்கோள் காட்டப்படும் வசனம் சங்கீதம் 68:18 லிருந்து எடுத்துக் கொள்ளப்பட்டது, சங்கீதத்தில் சொல்லப்பட்டுள்ளவையில் இலேசாக ஆனால் குறிப்பான வித்தியாசங்களைக் கொண்டிருந்த போதிலும் அதன் மேற்கோளாக இங்கே காணப்படுகிறது. (1) சங்கீதத்தில் தேவன் "ஏறிப்போவது போல" பேசுகிறது, அது கர்த்தர் தமது பழைய ஏற்பாட்டு மக்களிடத்தில் வாசம் பண்ணும் படிக்கு சீயோன் மலையின்மேல் ஏறுவதைக் குறிப்பிடலாம். (2) இந்த சங்கீதம் தேவன் வரங்களைப் "பெற்றதாகப் பேசுகிறது." இந்த நிருபத்தில், பவுல் கிறிஸ்துவை குறிப்பிட்டு பேசினார் என்பது தெளிவு, அதன் மூலம்* ***வரங்கள்*** *அவரோடு சம்பந்தப்படுத்தப்பட்டதாக வசனங்கள் முன்னுரைத்தன. ஆகிலும் பழைய ஏற்பாட்டில் மேற்கோள் காட்டப்பட்ட வசனம் கிறிஸ்து வரங்களைக்* கொடுக்கிறார், பெறுவதில்லை *என்று பேசப்பட்டது. தொடர்ந்து, கிறிஸ்து* ***பரமேறிப்போன*** பின்பு *கிறிஸ்துவின் வரங்கள் கொடுக்கப்பட்டதாக பவுல் சங்கீதத்தைச் சுட்டிக் காட்டுகிறார், அதாவது, அவரது மரணம் மற்றும் உயிர்த்தெழுதலைத் தொடர்ந்து தேவனுடைய வலது பாரிசத்தில் மகிமையடைந்த பின்பு இது நடந்தது. பின்னதாகக் குறிப்பிடப்பட்ட இந்தக் கருத்து சங்கீதத்துடன் பயன்படுத்தப்பட்டதில் பிரச்சனை எதுவுமில்லை, ஆனால் வரங்களைப் பெறுவது கொடுப்பதுபற்றி என்ன?*

*யூத டார்கம்ஸ்*[3] *சங்கீதம் 68 ஐப் பயன்படுத்தி மேசோ தேவனுடைய பிரமாணத்தைப் பெறுவதற்காக மலையின்மேல் ஏறிப் போவதைக் குறிப்பிட்டு பிறகு அவர் இஸ்ரவேலுக்கு பிரமாணத்தைக் கொடுத்ததைக் காட்டினார்.*[4] *எபிரேய டார்கம்ஸ் வசனங்களின் மொழிபெயர்ப்பில் பெறுவதாக இருந்ததை செப்துவஜிந்த்தில் பெற்றுக் கொள்வதாக மாற்றப்பட்டிருந்தன. மற்றும் மோசே இஸ்ரவேலருக்கு பிரமாணத்தைக் கொடுப்பதாக சித்தரிக்கப்பட்டிருந்தது. எபேசியரில் பவுல் இதே காரியத்தைத் தான் செய்திருப்பதாகக் காணுகிறது, கிறிஸ்துவின் பரமேறுகிற காட்சியும் சபைக்கு வரங்களை அளிப்பதையும் வலியுறுத்தியுள்ளார். டார்கம்ஸின் கருத்தில் பவுலுக்கு பரிச்சயமாகியிருக்க வேண்டும், சந்தேகமில்லை, பரிசுத்த ஆவியானவர் தம்மை மேற்கோள் காட்டும் விஷயத்தில் அனுசரித்துப் போகிறவர். அவர் பின்வருமாறு சொல்வதாக எடுத்துக் கொள்ளலாம், "நான் இந்த சங்கீதத்தை எழுதும்படி தாவீதை வழி நடத்தி தேவன் சீயோன் மலையின் மேல் ஏறினபோது இஸ்ரவேலோடு தமது வாசஸ்தலத்தை ஏற்படுத்தினார், இஸ்ரவேலர்கள் தங்கள் தொழுகையையும் ஊழிய சேவையையும் அவருக்கு வரங்களாகக் கொடுத்தார்கள். நான் பவுலையும் இந்த சங்கீதத்தைப் பயன்படுத்தும்படி*

வழிநடத்தி கிறிஸ்து தேவனுடைய வலது பாரிசத்தில் உயர்த்தப் பட்டதையும் அவர் சபைக்கு அளித்த வரங்களையும் குறித்து வலியுறுத்தும்படி செய்தேன்." எபேசியரில் சங்கீதம் 68 ன் பயன்பாடு கைக்கொள்ளுகிற விஷயமேயன்றி பொழிப்புரை விஷயமல்ல, மேலும் பவுல் பரிசுத்த ஆவியினால் அப்படிப்பட்ட பயன்பாட்டினிமித்தம் வழிநடத்தப்பட்டார்.[5]

சங்கீதம் 68:18 நடபடிகள் 2:33ன் பின்னணியை உடையதாக இருக்கலாம், ஆகையால், பெந்தெகோஸ்தே நாளில் சபையின் ஆரம்பத்துடன் தொடர்புடையதாகும். கிறிஸ்து ஏற்கனவே பரமேறிச் சென்றிருந்தார், அந்த நாளில் கீழ்ப்படிந்த விசுவாசிகள் மேல் அவர் இரட்சிப்பின் வரத்தையும் பரிசுத்த ஆவியின் வரத்தையும் பொழிந்தருளினார் (நடபடிகள் 2:38). மகிமையுள்ள கிறிஸ்து தேவனுடைய வலது பாரிசத்தில் வீற்றிருந்து நடபடிகள் 2ல் துவங்கி இந்த நாள் வரைக்கும் இதற்கு அப்பாற்பட்ட காலம் வரைக்கும் சபைக்கு தேவையான எல்லாவற்றையும் கொடுத்திருக்கிறார்.

**அவர் சிறைப்பட்டவர்களை சிறையாக்கி(னார்),** இந்த வசனப் பகுதியில் கிறிஸ்து பாவம், மரணம், மற்றும் தமது சிலுவையின் மூலம் வந்த கல்லறை மற்றும் வெறுமையாக்கப்பட்ட கல்லறை ஆகியவற்றை வெற்றி கொண்ட உண்மை குறிப்பிடப்படுகிறது. அவர் பழங்கால ஆட்சியாளர்களைப் போல இந்த சத்துருக்களை சிறையாக்கி தங்கள் நாட்டுக்கு அவர்கள் தங்கள் பின்னே சிறைபட்டவர்கள் தொடர்ந்துவர போய்ச் சேருவது போல ஏறிப்போனார். அவருடைய உயிர்த்தெழுதலைத் தொடர்ந்து. வெற்றிகரமாக பரலோகத்திற்குத் திரும்பிப் போனார் (காண்க 1:20, 21). முன்பு பாவத்திற்கு சிறைப்பட்டிருந்தவர்கள் இனி எப்போதும் கிறிஸ்துவுக்கென்று ஊழியம் செய்யும் படி விடுதலையாகியிருக்கிறார்கள். பவுல் தன்னையும் மற்றவர்களையும் கிறிஸ்துவுக்கு ஊழியக்காரர்களென்று குறிப்பிட்டார் (ரோமர் 1:1; பிலிப்பியர் 1:1; தீத்து 1:1). "ஊழியக்காரன்" என்பது *doulos* என்பதன் மொழியாக்கம், அதன் பொருள் "அடிமை, எப்பொழுதும் பிறருக்கு ஊழியஞ் செய்து கொண்டிருப்பவன்."[6] இந்தப் பொருளில், கிறிஸ்தவர்கள் கிறிஸ்துவுக்கு சிறைப்பட்டவர்கள் எனலாம்.

**வசனங்கள் 9, 10.** இவை அடைப்புக்குறிக்குள் கொடுக்கப்பட்ட வாக்கியம், இதில் வரும் வலியுறுத்தல்களெல்லாம் கிறிஸ்துவின் பரமேறுதலையும் அவர் சபைக்கு வரங்களை அளிப்பதும் பற்றியது. கிறிஸ்து பரலோகத்திலிருந்து **கீழே பூமிக்கு இறங்கி,** வாழும்படி வந்து, பாவங்களுக்காக மரித்து, உயிரோடு எழுப்படுதலையும் குறிப்பிடுகிறது. இப்பொழுது **அவர்** "எல்லாவற்றுக்குமேல்" பரலோகத்துக்கு மறுபடியும் **ஏறிப் போனார்** (1:21).

கிறிஸ்து பூமியின் தாழ்விடங்களில் இறங்கினார் என்பதை விளக்கப்படுத்த எடுத்துக் கொள்ளும் எந்த பிரயாசமும் அதற்கு அவர் மரித்ததிலிருந்து உயிர்த்தெழுதல் வரை அவர் பாதாளத்தில் இருந்தார் எனும் போதனையும் (நடபடிகள் 2:27) பவுலின் வலியுறுத்தும் கருத்தை தவற விடுகிறது என்று பொருள்படும். அதே போல, இந்த வசனப் பகுதியை விளங்கிக்கொள்ள பெந்தெகோஸ்தே நாளில் ஆவியாக இறங்கியது அவருடைய அவதாரம் என்பதை நாம் வித்தியாசப்படுத்தி பார்க்க வேண்டுவதில்லை. பவுலின் கருத்து என்ன வென்றால், கிறிஸ்து பூமியில் சிலுவையிலே மரிக்கும்படி இறங்கினார், சபைக்கு வரங்களை அளிக்கும்படி பரலோகத்திற்கு ஏறினார் என்பதுதான்.

*"தமது ஆவியினாலே வரங்களை சபைக்கு அளிக்கும் செயல்புரிபவரே இப்படியாகத் தமது கடமையை நிறைவேற்றிய அவர்தான் பரமேறிச் சென்று இப்பிரபஞ்சத்தின் கர்த்தரானார்."*[7]

***எல்லா வானங்களுக்கும் மேலாக*** *என்பது சங்கீதம் 68 லிருந்து மேற்கோளாக "உன்னதங்களில்" என்பதை தொடர்புபடுத்துகிறது (காண்க 4:8) மேலும் அது இப்பிரபஞ்சத்திற்கு (அண்டசராசரங்களுக்கு மேலாக) கிறிஸ்து இருப்பதாக குறிப்பிடப்படுகிறார். சிருஷ்டிக்கப்பட்ட எல்லாவற்றுக்கும் அவர் மேலானவர், மேலும் இப்பொழுது அவர் "[தேவனுடைய] வலது பாரிசத்தில்" இருக்கிறார் (1:20). இந்த உயர்வு கிறிஸ்து* ***எல்லாவற்றையும் நிரப்ப*** *ஏதுவாக்கியது. கிறிஸ்துவின் உயர்வையும் சர்வலோக ஆளுகையையும் 1:22-23ல் சொல்லப்பட்டது குறித்து பவுலின் பார்வையில், அவருடைய பரமேறுதல் சகல உலகத்தையும் நிரப்ப ஏதுவான வழியை அவருக்குத் திறந்தது, அது ஆவிக்குரிய ரீதியில் தலையாய ஆளுநராக சபைக்கு தலையாகவும் நன்மை செய்பவராகவும் எல்லாவற்றையும் நிரப்பத்தக்கவரானார்.*

## *கிறிஸ்து கொடுத்த வரங்கள் (4:13)*

***[13]அவர் சிலரை அப்போஸ்தலராகவும், சிலரைச் தீர்க்கதரிசிகளாகவும், சிலரை சுவிசேஷகராகவும், சிலரை மேய்ப்பராகவும் போதகராகவும் ஏற்படுத்தினார்.***

***வசனம் 13.*** *கிறிஸ்து பூமியிலே இறங்கி, வெற்றி கொண்ட கர்த்தராக, பரலோகத்துக்கு ஏறிப்போய், அதினால் அவர், சபைக்குத் தலையாகவும் மனுஷர்களுக்கு வரங்களைக் கொடுக்க இயன்றது. இந்த வசனத்தில், பவுல் அவற்றில் சில வரங்களை வரிசைப்படுத்துகிறார்.*

*முதலாவதாக, அவர்* ***அப்போஸ்தலர்களை*** *பெயரிட்டார். கிறிஸ்து பன்னிரெண்டு அப்போஸ்தலர்களைப் பட்டியலிட்ட போது, அவர்கள் உயிர்த்தெழுதல் உட்பட சாட்சியிடும்படி தகுதியுடையவர்களானார்கள் (நடபடிகள் 1:8, 22, 23; 1 கொரிந்தியர் 9:1, 2) அற்புதங்களைச் செய்தார்கள் (2 கொரிந்தியர் 12:12). இந்த மனுஷர்கள் பரிசுத்த "ஆவியினால் ஞானஸ்நானம் பெற்றார்கள்" (நடபடிகள் 1:5), அதினால் அவர்கள் கிறிஸ்துவின் செய்தியை பரிமாறிக் கொள்ளவும் அந்தச் செய்தியை அற்புதங்களால் உறுதிப்படுத்தவும் செய்தனர் (நடபடிகள் 1:8; 2:1-4; எபிரெயர் 2:3, 4). அவர்கள் தங்கள் கைகளை வைக்கிறதினால் அற்புத வரங்களை மற்றவர்களுக்குக் கொடுக்க முடிந்தது (நடபடிகள் 6:6; 8:6; 2 தீமோத்தேயு 1:6).*

*"அப்போஸ்தலன்" எனும் பதம் (apostolos) apostellō, என்பதன் பெயர்ச் சொல், தொகுப்பு வினைச்சொல்லாக apo, என்பது "... லிருந்து" மற்றும் stellō, "அனுப்புதல்" என்பவைகளைக் கொண்டு தொகுக்கப்பட்ட வார்த்தை. இதன் கருத்தை எளிமையாகச் சொன்னால் "அனுப்பப்படுதலைமட்டும்" குறிப்பதில்லை; அது குறிப்பிடப்பட்ட ஊழியத்தினிமித்தம் அனுப்பப்படுதல் என்று விவரிக்கப்படுகிறது.*[8] *கிறிஸ்து தமது அப்போஸ்தலர்களுக்கு சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கிற ஊழியத்தைக் கொடுத்தனுப்பினார், அது தேவனுடைய ராஜ்யத்தின் "நற்செய்தி" (மத்தேயு 10:7; மாற்கு 16:15). இந்த அப்போஸ்தலர்கள் கிறிஸ்துவின் வரங்களில் ஒன்றாக சபைக்கு*

விளங்கினார்கள்.

"அப்போஸ்தலன்" எனும் பதம் புதிய ஏற்பாட்டில் பலதரப்பட்ட பொருளில் பயன்படுத்தப்பட்டுள்ளது. அது இயேசுவால் தெரிந்து கொள்ளப்பட்ட பன்னிருவருக்கு அப்பாற்பட்டும் பேசப்படுகிறது. பின்னர் யூதாஸின் இடத்தில் மத்தியா தெரிவு செய்யப்பட்டார் (நடபடிகள் 1:12-26), மற்றும் தரிசு பட்டணத்தானாகிய சவுல் (பவுல்) "அகால பிறவிபோன்ற அவர்" தெரிந்து கொள்ளப்பட்டார் (1 கொரிந்தியர் 15:8). சபையை தான் துன்பப்படுத்தினதினாலே அப்போஸ்தலர்கள் எல்லாரிலும் பவுல் சிறியவன் என்றார். இருந்தும் பன்னிருவரில் ஒன்றிலும் தான் குறைவுள்ளவனல்ல என்பதை உறுதிப்படுத்தினார் (1 கொரிந்தியர் 15:9; 2 கொரிந்தியர் 11:5; 12:11). மற்றவர்கள் - இயேசு, (இயேசுவின் சகோதரனாகிய) யாக்கோபு, மற்றும் பர்னபா உட்பட எபிரேயர் 3:1; கலாத்தியர் 1:19; மற்றும் நடபடிகள் 14:14ல் அப்போஸ்தலர் என அழைக்கப்பட்டனர்; ஆகிலும், அவர்கள் விசேஷித்த ஊழியத்தினிமித்தம் மட்டுமேயன்றி மத்தியாவைப் போல் பன்னிருவரில் ஒருவராக சேர்க்கப்பட்டு அனுப்பப்படவில்லை. அப்போஸ்தலரின் பாரம்பரிய வம்ஸாவழி என்று ஒன்று இல்லை. உயிர்த்தெழுதலை கண்ணாரக் கண்ட சாட்சிகளுக்கப்பால் தகுதி பெறுவோர் ஒருவருமில்லை. அப்போஸ்தலரின் ஊழியம் என்றென்றும் நிலைத்திருக்கதக்க வகையில் நிறைவேற்றப்பட்டது. மேலும் கிறிஸ்துவின் அப்போஸ்தலர்களாக முதல் நூற்றாண்டில் ஊழியம் செய்தவர்கள் அவர்களுடைய ஒப்புயர்வற்ற ஊழியம் காரணமாக என்றென்றைக்கும் அங்கீகாரம் பெற்றிருப்பார்கள் (காண்க மத்தேயு 19:28; வெளிப்படுத்தின விசேஷம் 21:14).

புதிய ஏற்பாட்டு ஒரு தீர்க்கதரிசிகள் தெய்வீக செய்தியைப் பேசினார்கள்.[9] "தீர்க்கதரிசி" என்பதற்கான கிரேக்க வார்த்தை (*prophētēs*) ஒரு செய்தியை "பேசுபவர்" அல்லது "வெளியிடுபவர்" என்று அடையாளப்படுத்துகிறது.[10] புதிய ஏற்பாட்டு தீர்க்கதரிசிகள் விஷயத்தில், "தேவனுக்கென்று பேசுபவர்கள்" என்று பொருள். தீர்க்கதரிசிகள் சிலவேளைகளில் எதிர்காலத்தைப் பேசுபவர்களாயிருந்த போதிலும், அவர்களுடைய பெரிதான செயல் தேவனுடைய சித்தத்தைக் குறித்துப் பேசுவதுதான். புதிய ஏற்பாட்டில் சில ஜனங்கள் தீர்க்கதரிசிகளாக நியமிக்கப்பட்டிருந்தார்கள்: அகபு (நடபடிகள் 11:27, 28; 21:10, 11), அந்தியோகியாவில் சில தீர்க்கதரிசிகள் (நடபடிகள் 13:1), யூதா மற்றும் சீலா (நடபடிகள் 15:32), மற்றும் பிலிப்புவின் நான்கு குமாரத்திகள் (நடபடிகள் 21:9). அப்போஸ்தலர்கள் கிறிஸ்துவினால் குறிப்பாக தெரிந்து கொள்ளப்பட்டார்கள், ஆனால் ஒருவர் எப்படி புதிய ஏற்பாட்டு சபையில் தீர்க்கதரிசியாக வந்தார் என்று குறிப்பாக சொல்லப்படவில்லை.

தீர்க்கதரிசனம் என்பது ரோமர் 12 மற்றும் 1 கொரிந்தியர் 12 ல் ஆவிக்குரிய வரங்களில் ஒன்றாக வரிசைப்படுத்தப்பட்டுள்ளது என்பதாலும், இந்த வரங்களெல்லாம் அப்போஸ்தலர்கள் கைகளை வைத்துக் கொடுக்கப்பட்டவை என்ற முடிவுக்கு நாம் வந்திருப்பதாலும் (4:7ன் விளக்கவுரையைக் காண்க), புதிய ஏற்பாட்டுத் தீர்க்கதரிசிகள் "பக்தி விருத்தியும், புத்தியும், ஆறுதலும்" தங்களுடைய உள்ளூர் சபையிலே உண்டாகத் தக்கதாக அப்போஸ்தலர்களால் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள் என்பதாக காணப்படுகிறது (1 கொரிந்தியர் 14:3). தீர்க்கதரிசன வரத்தைப் பெற்றிருந்தவர்கள் தங்களுக்காக செய்தியை அவர்கள்

ஆவியானவரின் ஏவுதலினால் பெற்றிருக்க வேண்டுமேயன்றி மற்றவர்களிடம் கேட்டோ அல்லது தனிப்பட்ட முறையில் கற்றுக் கொண்டோ வந்ததல்ல. தீர்க்கதரிசிகள் தேவனுடைய வெளிப்பாடுகளை அறிவிக்கத் தக்கதாக கிறிஸ்துவால் ஆதிசபைக்கு கொடுக்கப்பட்ட வரங்களில் ஒன்று.

அப்போஸ்தலர்களைப் போலவே தீர்க்கதரிசிகள் தெய்வீக வல்லமையை பயன்படுத்தி தேவனுடைய செய்தியை பிரசங்கித்து அவைகளை உறுதிப்படுத்தினார்கள். அவைகள் புதிய ஏற்பாடு எழுதப்பட்டு முழுமையாகாதகாலத்திற்கு முன்பு சபை அதன் குழந்தைப் பிராயத்தில் இருந்த காலத்தில் சபையின் வளர்ச்சிக்காகவும் விருத்தியடைவதற்கும் உதவும்படி கிறிஸ்துவால் கொடுக்கப்பட்ட வரங்கள். அதுவரை, தேவனுடைய செய்தி அப்போஸ்தலர்களுக்கும் தீர்க்கதரிசிகளுக்கும் தேவனுடைய ஆவியினால் வெளிப்படுத்தப்பட்டது. அவர்களுடைய அறிவிக்கப்பட்ட செய்தி கிறிஸ்துவின் சபைக்கு அஸ்திபாரமாக உதவி செய்தது (காண்க 2:20; 3:5). முழு புதிய ஏற்பாடும் பூர்த்தியாகியதும், ஏவப்பட்டுப் பேசிய இந்த மனுஷர்களின் அவசியம் ஓய்ந்து போனது ஒரு காலத்தில் ஏவப்பட்ட மனுஷருக்குள் கொடுக்கப்பட்ட செய்தி பிறகு ஏவப்பட்ட புத்தகத்தில் நிரந்தரமாக எழுதப்பட்டாயிற்று.

**சுவிசேஷகர்** எனும் பதம் "நற்செய்தியைக் கொடுப்பவர், சுவிசேஷ வரலாறை அறிவிப்பவர்."[11] "சுவிசேஷம்" என்பதன் கிரேக்க வார்த்தை, (*euangelion*), "நற்செய்தியைக்" குறிப்பிடுகிறது, அது கிறிஸ்துமூலம் கிடைக்கப் பெறும் இரட்சிப்பின் செய்தி.[12] சுவிசேஷகனின் கடமைப் பணி இந்த செய்தியை அறிவிப்பதாக இருந்தது (*euangelizō*). புதிய ஏற்பாட்டில் பிலிப்பு சுவிசேஷகன் என்று அழைக்கப்பட்டான் (நடபடிகள் 21:8), மற்றும் தீமோத்தேயு "சுவிசேஷகனுடைய வேலையைச் செய்யும்படி" சொல்லப்பட்டான் (2 தீமோத்தேயு 4:5). இந்த மனுஷர்களுக்கு ஆவிக்குரிய வரங்கள் அப்போஸ்தலர்கள் கைகளை வைப்பதன் மூலம் கொடுக்கப்பட்டது (நடபடிகள் 6:5; 8:6; 2 தீமோத்தேயு 1:6), சுவிசேஷ ஊழியத்தில் வரங்கள் ஒரு இயல்பாய் இருக்கும் காரியமல்ல. முதலாம் நூற்றாண்டிலிருந்து இன்று வரை, கிறிஸ்துவின் நற்செய்தியை அறிவிப்பது சபையின் ஊழியத்தைக் கொண்டு செல்வதில் முக்கிய பகுதியாக இருந்துள்ளது. முதல் நூற்றாண்டு சுவிசேஷகர்கள் விசேஷித்த ஆவிக்குரிய வரங்கள் கொடுக்கப்பட்டு அவர்கள் தங்கள் பணிகளை செய்ய ஏதுவாக்கப் பட்டனர். இன்று, தேவன் சுவிசேஷகர்களுக்கு விசேஷித்த புத்தகம் ஒன்றைக் கொடுத்திருக்கிறார், அது ஏவப்பட்ட புதிய ஏற்பாடு, அதிலிருந்துதான் அவர்கள் நற்செய்தியை பிரசங்கிக்கிறார்கள்.

சுவிசேஷகர்கள் உள்ளூர் சபைகளுடன் ஊழியஞ்செய்தார்கள், பவுல் எபேசு சபையில் உதவும்படி தீமோத்தேயுவை பவுல் உபதேசிப்பதன் மூலம் காணுகிறது (1 தீமோத்தேயு 1:3, 4). அவர்களுடைய ஊழியம் பெரும்பகுதி சுவிசேஷத்தை பிரசங்கிப்பதும் உள்ளூர் சபைகளை நாட்டுவதுமே (காண்க நடபடிகள் 8:5-12). அப்போஸ்தர்கள் எல்லா (உள்ளூர்) சபைகளுடனும் அவர்கள் ஊழியம் செய்தார்கள் என்ற முடிவுக்கு வரக்கூடும் (2 கொரிந்தியர் 11:28), தீர்க்கதரிசிகள் சபைகளுக்குள் ஊழியஞ்செய்தார்கள் (1 கொரிந்தியர் 12; 14), சுவிசேஷகர்கள் புதிய சபைகளை ஸ்தாபிதம் பண்ணி உள்ளூர் சபைகளை போஷித்து வழிநடத்தினர் (தீத்து 1:5).

**மேய்ப்பர்கள்** என்பது *poimēn,* என்பதன் மொழிபெயர்ப்பு, பொருள் "மேய்ச்சலைக் கொடுப்பவர்." கூலியாள் மந்தைக்கு மிரட்டல் வரும் போது ஆடுகளை விட்டு ஓடிப்போவான் என்றும், மேய்ப்பன் ஆடுகளுக்காக தன் ஜீவனையும் கொடுக்கிறான் என்றும் இயேசு சொன்னார் (யோவான் 10:11-13). ஒரு உண்மையான மேய்ப்பன் தன் ஆடுகளுக்காக அக்கறை கொண்டிருப்பதால் அவைகளுக்கு போஷாக்கைக் கொடுப்பதற்கும் அப்பால் அதிக உதவிகளை அவைகளுக்குச் செய்கிறான். புதிய ஏற்பாடு சபையின் தலைமை ஸ்தானத்தில் இருப்பவர்களுக்கு ஒரே பதவியைக் குறிக்கும் மூன்று வார்த்தைகளைப் பேசுகிறது. இந்த மனுஷர்கள் "மேய்ப்பர்கள்," "மூப்பர்கள்" மற்றும் "கண்காணிகள்" என்று அழைக்கப்படுகின்றனர். இந்த மூன்று பதங்களும் பவுல் எபேசு பட்டணத்து சபையின் "மூப்பர்களைச் சந்தித்துப்பேசும் போது குறிப்பிட்டார்" (நடபடிகள் 20:17, 28). "மூப்பர்கள்" என்பது *presbuteros* என்பதன் மொழிபெயர்ப்பு, அதன் பொருள் "மூப்பு அடைந்த மனுஷர்களின் கூட்டம்."[13] சபையைப் பொறுத்தமட்டில், இந்தப் பதம் விசுவாசத்தில் அதிக வளர்ச்சி பெற்றவர்கள், புதிதாக மனமாற்றப் பட்டவர்களல்ல (1 தீமோத்தேயு 3:6). எபேசு சபை மூப்பர்களுக்கு, பவுல் சொன்னார், "உங்களைக் குறித்தும், தேவன் தம்முடைய சுய இரத்தத்தினாலே சம்பாதித்துக் கொண்ட தமது சபையை மேய்ப்பதற்குப் பரிசுத்த ஆவி உங்களை கண்காணிகளாக வைத்த மந்தை முழுவதையுங்குறித்தும், எச்சரிக்கையாயிருங்கள்" (நடபடிகள் 20:28). "கண்காணி," என்பதற்கு (*episkopos*), என்பது மூப்பர்களின் பணியைக் குறிப்பிடுகிற கிரேக்க வார்த்தையின் மொழிபெயர்ப்பு, அந்தப் பணி மந்தையை மேற்பார்வையிட்டுக் கவனித்துக் கொள்ளுதல். பவுல் தொடர்ந்து நடபடிகள் 20:28ல், மூப்பர்கள், அல்லது கண்காணிகள், "தேவனுடைய சபையை மேய்க்க" வேண்டியவர்கள். இந்த விளக்கம் நம்மை மீண்டும் எபேசியர் 4ற்கு கொண்டு வருகிறது: "மேய்ப்பர்கள்," "காண்காணிகளாகவும்" "மூப்பர்களாகவும்" இருக்கிறார்கள்.

ஒவ்வொரு (உள்ளூர்) சபையிலும் மூப்பர்கள் நியமிக்கப்பட்டிருந்தார்கள் என புதிய ஏற்பாடு போதிக்கிறது (நடபடிகள் 14:23). ஒரு உள்ளூர் சபையிலே பன்மை (பல) மூப்பர்கள் எப்பொழுதும் நியமிக்கப்பட்டார்கள், அவர்கள் விசேஷித்த தகுதியாம்சங்களைப் பெற்றிருந்தார்கள் (1 தீமோத்தேயு 3:1-7; தீத்து 1:5-9). சபைகள் வளரும் போது ஒவ்வொரு உள்ளூர் சபையும் சுய ஆட்சி முறையைக் கொண்டிருக்க வேண்டும் என்பது தேவனுடைய திட்டம், மூப்பர்களின் வழிகாட்டலில் கிறிஸ்துவுக்கு ஊழியம் செய்ய வேண்டும். அந்தந்த உள்ளூர் சபைகளைக் காட்டிலும் பெரிய அமைப்புகள் பூமிக்குரிய ரீதியில் இருப்பதாக புதிய ஏற்பாட்டு சபை கொண்டிருக்க வில்லை. உள்ளூர் சபைகள் ஒன்று சேர்ந்து பொதுவான இலக்குகளை எட்ட பாடுபட்டன (காண்க 2 கொரிந்தியர் 8; 9), இருப்பினும் அவரவர் சுதந்தரத்தை அவரவர் தக்க வைத்துக் கொண்டனர். கிறிஸ்து சபைக்கு "மேய்ப்பர்கள்," அல்லது "மூப்பர்கள்," அல்லது "கண்காணி" களாகிய வரங்களைக் கொடுத்து சபை ஒருபோதும் இந்தக் குறையோடு இருக்கக் கூடாது என்பதற்காக எப்போழுதும் இந்த வரங்களை அளித்தார்.

கிரேக்க வார்த்தையில் வரும் "அப்போஸ்தலர்கள்," "தீர்க்கதரிசிகள்," "சுவிசேஷகர்கள்," மற்றும் "மேய்ப்பர்கள்," போன்று **போதகர்கள்**

*எனும் பதம் கிரேக்க மொழியின் முன்னிடைப் பெயர்ச் சொல் எதுவும் குறிப்பிடப்படவில்லை. சில விரிவுரையாளர்கள் “மேய்ப்பர்கள்” எனும் வார்த்தையும் “போதகர்கள்” எனும் வார்த்தையும் ஒரே கூட்டத்தைக் குறிக்கும் ஆதலால் இது “மேய்ப்பர்களாகிய போதகர்கள்” என்று மொழிபெயர்க்கப்பட்டிருக்க வேண்டும் என்று நம்புகிறார்கள். இரண்டு பணிகளுமே உள்ளூர் சபையில் ஒன்றுக் கொன்று அருகாமையில் செயல்படும் ஊழியங்கள், ஆதலால் இரண்டிற்கும் ஒரே முன்னிடைப் பெயர் சொல் லப்பட்டுள்ளது.[14] மேய்ப்பர்கள் அனைவரும் போதகர்களாக இருந்தார்கள் (1 தீமோத்தேயு 3:2) ஆனாலும் எல்லா போதகர்களும் (ஆசிரியர்களும்) மேய்ப்பர்களாக இருந்தார்கள் என்பதற்கு எந்த அறிகுறியும் இல்லை.*

*ஒரு போதகர் (ஆசிரியர்) என்பவர் தேவனுடைய வசனத்தை மற்றவர்களுக்கு போதிப்பவர் (நடபடிகள் 18:11). கிரேக்க வார்த்தையான didaskalos என்பது புதிய ஏற்பாட்டில் ஒரு முதன்மைத்துவம் வாய்ந்த வார்த்தை, மற்றும் அது பலதரப்பட்ட வடிவங்களில் பயன்படுத்தப்பட்டுள்ளது. விசுவாசமுள்ள மனுஷர்கள் விசுவாசமுள்ளவர்களுக்குப் போதிக்க உண்மையுள்ளவர்களுக்குப் போதித்து, அவர்கள் வேண்டும் என்பது தேவனுடைய திட்டம் (2 தீமோத்தேயு 2:2). அனைத்துப் போதகர்களும் ஒரே விதமான போதனையை போதிப்பது அவசியமாகக் கருதப் பட்டது (1 கொரிந்தியர் 4:17; 1 தீமோத்தேயு 1:3), மற்றும் கள்ளப் போதகர்களைக் குறித்து எச்சரிக்கை கொடுக்கப்பட்டது (2 பேதுரு 2:1). போதிக்கும் கடமை மிகவும் பொறுப்பு வாய்ந்தது “உங்களில் அநேகர் போதகர்களாகாதிருப்பீர்களாக” என்று யாக்கோபு சொன்னார் (யாக்கோபு 3:1). போதிப்பதில் கட்டளைகளும், புத்திசொல்லுதலும், அறிவுறுத்தலும், உபதேசங்களும் உள்ளடக்கியுள்ளன (ரோமர் 2:18; கொலோசெயர் 3:16; 1 தீமோத்தேயு 4:11; 6:2).*

*ஆவிக்குரிய வரங்களில் ஒன்றாகிய போதனை (1 கொரிந்தியர் 12:28, 29), அற்புத சக்தியாக வெளிப்பாட்டையும் அறிவித்தலையும் கொண்டிருந்தது, ஆதிசபையிலே போதகர்கள் இருந்தார்கள், அவர்களுக்கு ஆவிக்குரிய வரம் இருந்ததோ இல்லையோ ஆனால் மற்றவர்களிடம் கற்றவைகளிலிருந்து போதித்தார்கள்.[15] அவர்கள் கிறிஸ்துவுக்குள் கண்ட புதிய ஜீவனையுடைய வாழ்வைக் குறித்தும் அவர்களுடைய வாழ்வில் சுவிசேஷத்தை வாழ்வது குறித்தும் மற்ற கிறிஸ்தவர்களுக்கு உபதேசம் பண்ணினார்கள் (காண்க 4:17-32). போதகர்கள் எப்போதுமே சபைக்கு கிறிஸ்துவால் கொடுக்கப்பட்ட வரமாக இருந்தார்கள், இருப்பார்கள், ஏனெனில் தேவனுடைய வெளிப்படுத்தப்பட்ட சித்தத்தைப் போதிப்பது கிறிஸ்தவர்களின் வளர்ச்சிக்கு எப்போதும் முக்கியமானதாக இருக்கும் (1 பேதுரு 2:2).*

## கிறிஸ்து கொடுத்த வரங்களின் நோக்கம் (4:12)

***[12]பரிசுத்தவான்கள் சீர்பொருந்தும் பொருட்டு, சுவிசேஷ ஊழியத்தின் வேலைக்காகவும், கிறிஸ்துவின் சரீரமாகிய சபையானது பக்தி விருத்தி அடைவதற்காகவும்.***

***வசனம் 12.*** *அடுத்ததாக பவுல் சபைக்கு இந்த வரங்களை கிறிஸ்து*

கொடுத்ததற்கான காரணங்களை கொடுக்கிறார். NASB மொழிபெயர்ப்பில் இந்த வரங்கள் கொடுக்கப்பட்டதற்கான இரண்டு காரணங்களைக் கொடுக்கிறது, ஆனால் கிரேக்க வசனப்பகுதி மூன்று காரணங்களை முன் வைக்கிறது. இந்த வசனம் ஆங்கிலத்தில் (*pros,* "for"), ("பொருட்டு") என்று துவங்குகிறது, ஆனால் இரண்டு சொற்றொடர்களும் (*eis,* "உள்ளாக" அல்லது "நோக்கி") என்று துவங்குகிறது. இந்த உண்மையே ஒருவேளை NASB வேதாகமத்தை மொழிபெயர்த்தவர்கள் வரங்களின் நோக்கங்களை இரண்டாகக் குறைத்திருக்கலாம், *pros* என்ற வார்த்தையும் *eis* என்ற வார்த்தையின் இரண்டு பயன்பாடுகளும் குறிப்பிடத்தக்க முக்கியத்துவம் எதுவுமில்லாதிருந்த போதும் மொழிபெயர்ப்பாளர்கள் அப்படிச் செய்திருக்கலாம். ரோமர் 3:25, 26ல், பவுல் தேவனுடைய நீதியை அறிமுகப்படுத்தும்படி *eis* எனும் வார்த்தையை ஒரு வசனத்திலும், *pros* எனும் வார்த்தையை அடுத்த வசனத்திலும் பயன்படுத்தினார். வசனம் 12 ன் மூன்று முன்னிடைச் சொல்லின் மாற்றம் மூன்று முன்னிடைச் சொற்களையும் வரங்களின் நோக்கங்களாக அடையாளப்படுத்தும்படி எழுதும் முறையிலும் வேறுபாடுகள் இருந்திருக்கலாம்.

முதலாவதாக, கிறிஸ்து கொடுத்த வரங்களின் நோக்கம் **பரிசுத்தவான்கள் சீர்பொருந்த வேண்டுமென்பதற்காக** இருந்தது. "சீர்பொருந்தும் பொருட்டு" எனும் இந்தப் பெயர்ச்சொல் *katartismos,* என்ற வார்த்தையின் மொழிபெயர்ப்பு, இவ்வார்த்தை புதிய ஏற்பாட்டில் இங்கு மட்டுமே காணப்படுகிறது. இதன் பொருள் "முற்றிலும் ஆயத்தப்படுத்துதல்," "முழுவதுமாக தயார்படுத்தி, பூரணமாக வைத்திருக்கும் செயல்" என்பது.[16] இதன் வினைச் சொல் வடிவம் பவுலின் எழுத்துக்களில் அநேக முறை காணப்படுகிறது. இந்த வசனத்தில், பொருள் என்னவெனில் சபைக்குக் கொடுக்கப்பட்ட வரங்களான ஊழியங்களின் பொருள் சபையின் அங்கத்தினர்களை ஒன்றிணைத்து அவர்களைத் தேவனுடைய வழியில் பயிற்றுவித்து சபையை பரிபூரணப்படுத்துவது என்று பவுல் அடையாளப்படுத்தினார்.

சுவிசேஷ **ஊழியத்தின் வேலைக்காகவும்** என்பது இரண்டாவது முன்னிடைச் சொற்றொடராக பவுலால் பயன்படுத்தப்பட்டது. அவர் விளக்கப்படுத்தி தலைமைத்துவ கடமைகள் என்பது சபை ஊழியம் செய்பவர்களால் சபை நிறைந்து காணப்பட வேண்டும் என்றார். கிரேக்க பதத்தில் இந்தவித ஊழியம் பலதரப்பட்ட பயன்பாடாகப் பேசப்படுகிறது. அது பவுலின் ஊழியத்திற்கும் (2 கொரிந்தியர் 3:8, 9; 4:1), அவருடைய உடன் ஊழியர்களுக்கும் (1 கொரிந்தியர் 16:15), அர்க்கிப்பையும் (கொலோசெயர் 4:17), மற்றும் தீமோத்தேயுவையும் (2 தீமோத்தேயு 4:5), குறிப்பிடுகிறது. மாற்கு 10:43ல் குறிப்பிடப்படுகிற "பணிவிடைக்காரன்" என்ற பெயர்ச் சொல் பரலோக இராஜ்யத்தில் எவன் பெரியவனாயிருப்பான் என்பதைச் சுட்டிக் காட்டுகிறது. இதே வார்த்தைதான் அரசு அலுவலர்களுக்கும் "பணியாளர்" என்று பயன்படுத்தப்பட்டது (ரோமர் 13:4), அதுவே தான் சபையில் உள்ள உதவிக்காரர்களுக்கும் (1 தீமோத்தேயு 3:8). பயன்படுத்தப்பட்டது. ஊழியஞ் செய்வதே முதல் நூற்றாண்டு சபையின் முக்கியமான குணாதிசயமாக இருந்தது, ஆதலால் கிறிஸ்து சபைக்கு வரங்களையளித்து, "சுவிசேஷ ஊழியத்தைச் செய்ய" ஏதுவாக்கினார்.

*கிறிஸ்துவின் சரீரமாகிய சபை பக்திவிருத்தியடையும் படியாக,* என்பது மூன்றாவது முன்னிடைச் சொற்றொடர் சபைக்கு இந்த வார்த்தைகளை கிறிஸ்து கொடுத்ததற்கான நோக்கத்தை விளக்கப்படுத்துகிறது. பக்திவிருத்தி யடையும்படி. அடையும்படி என்பது "கட்டப்படும்" எனும்பொருளில் (*oikodomē*) மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. அது உருவகமாக "ஒரு வீட்டைக்கட்டுதல்" என்பது போன்றது.[17] இங்கே பயன்படுத்தப்பட்ட "இந்த வார்த்தையின் பொருள் பக்தி விருத்தியடையச் செய்தல்"[18] இந்த வரங்கள் கிறிஸ்துவின் சபையாகிய சரீரத்தின் அங்கத்தினர்கள் ஆவிக்குரிய வளர்ச்சி பெற்று கட்டப்படும் கருத்தாக விவரிக்கிறது (காண்க 1:22, 23).

அப்போஸ்தலர், தீர்க்கதரிசிகள், மேய்ப்பர்கள், சுவிசேஷகர்கள், மற்றும் போதகர்கள் ஆகியவர்களைக் கொண்டு முதல் நூற்றாண்டுகளினுடே சபை முறையாய் இயங்க கிறிஸ்து ஏதுவாக்கினார். இந்த செயல்முறையில் காணும் அற்புத நிகழ்வுகள் (ஏவப்பட்டு செய்தியை வெளிப்படுத்தி, வெளிப்படுத்தப்பட்ட செய்தியை உறுதிப்படுத்த அற்புதங்களை நிகழ்த்துவதும்) புதிய ஏற்பாட்டு புத்தகங்கள் ஒரு முழுமையானதும் உறுதிப்படுத்தப்பட்டதுமான வெளிப்பாட்டை அடையும் வரை, அற்புத வரங்கள் தேவைப்பட்டிருந்தது, முழுமைபெற்ற போது கிறிஸ்தவ சட்ட திட்டத் தொகுப்பில் ஏற்றுக் கொள்ளப்பட்டது. (காண்க "மேலும் கற்க: கிறிஸ்தவ சட்டத்திட்டத் தொகுப்பு.") இன்று, மேலும் வெளிப்படுத்தப்படுதலோ அல்லது அற்புதங்களால் உறுதிப்படுத்தப்படுதலோ தேவையில்லை ஏனெனில் நிறைவுற்றதும். முழுமை பெற்றதும். அதிகாரம் பெற்றதுமான தேவனுடைய வசனம் ஏவப்பட்ட ஒரு புத்தகமாக நமக்கு இருக்கிறது (2 தீமோத்தேயு 3:16, 17; 1 பேதுரு 4:11; யூதா 3).

## கிறிஸ்து கொடுத்த வரங்களின் இலக்குகள் *(4:11, 14-16)*

### *குழந்தைப் பிராயச்சபையின் வளர்ச்சி (4:11)*

***[11]மேலும் நாம் அனைவரும் தேவனுடைய குமாரனைப் பற்றும் விசுவாசத்திலும் அறிவிலும் ஒருமைப்பட்டவர்களாகி, கிறிஸ்துவினுடைய நிறைவான வளர்ச்சியின் அளவுக்குத் தக்க பூரண புருஷராகும் வரைக்கும்.***

**வசனம் 11.** *பரிசுத்தவான்கள் சீர்பொருந்தி, சுவிசேஷத்தின் வேலைக்காக, கிறிஸ்துவின் சரீரமாகிய சபை* **பக்தி விருத்தியடையும் வரை நாம் அனைவரும்** *தேவனுடைய குமாரனைப் பற்றும்* **விசுவாசத்தில்** தொடரவேண்டும். "வரைக்கும்" என்பது எவ்வளவு காலம் அற்புத நிகழ்வுகள் கிறிஸ்துவின் வரங்களாக நீடித்திருக்கும் என்பதற்கான காலத்தைக் குறிப்பிடுகிற முன்னிடைச் சொற்றொடர் இது. ஏவப்பட்ட மனுஷர்கள் அவைகளின் ஊழியத்தை நிறைவேற்றின பின்பு, இந்த வரங்கள் ஓய்ந்து போகும். எப்பொழுதுமே சபையிலே விசேஷித்த நோக்கத்திற்காக அனுப்பப்படும் நபர்கள் இருப்பார்கள், ஆகிலும் அப்போஸ்தலர்த்துவம் ஒழிந்து போகும் வகையில் கொடுக்கப்பட்டது. சபையிலே தீர்க்கதரிசிகளின் வல்லமையோடும்

உறுதியோடும் பேசுபவர்கள் சபைக்குத் தேவை, ஆகிலும் தீர்க்கதரிசன வரம் ஒழிந்து போயிற்று. சபைக்கு எப்போதுமே சுவிசேஷகர்கள் தேவை மற்றும் தேவனுடைய வசனத்தைப் போதிக்கும் போதகர்களும் உள்ளூர் சபைகளிலும் சுவிசேஷதளங்களிலும் தேவை, ஆனால் அவர்களின் செய்தி இப்பொழுது நிறைவேறின (அல்லது பூர்த்தியான) வசனங்களைப்படிப்பதன் மூலமே வரவேண்டும். உள்ளூர் சபைகளை எப்பொழுதும் போஷித்துக் காப்பாற்ற மேய்ப்பர்கள் அவசியம், ஆகிலும் இன்று அவர்கள் வெளிப்படுத்தப்பட்ட தேவனுடைய வசனத்தினால் போதிக்கப்பட்டு அதினால் தகுதி பெற்று மற்றும் நியமனம் பெற்று அதன்படி பேசுகிறவர்களாக வேண்டும். பவுல் சபையின் குழந்தைப் பிராயத்தை மனதில் கொண்டு, அன்றிருந்த கிறிஸ்தவர்கள் நிறைவு பெற்ற புதிய ஏற்பாட்டை உடையவர்களாயிராமலிருந்தமையால் அவர்களுக்கு அற்புத வரங்கள் தேவைப்பட்டிருந்த வேளையில் எழுதினார். சபை வளர்ச்சியடைந்து முழுமை பெற்று வந்த நேரத்தில், தேவனுடைய முழுமையான வெளிப்பாடு உண்டான போது, இந்த அற்புத வரங்கள் ஒழிந்து போகும்.

குழந்தைப் பிராயத்தில் இருந்த சபை ஒருமைப்பாட்டைக் காத்து கொள்ள மூன்று வழிகளைக் கொண்டிருக்க வேண்டியிருந்தது. முதலாவதாக, அங்கத்தினர் “விசுவாசத்தில் ஒருமையைக் காத்துக் கொள்ள வேண்டும்.” “விசுவாசம்” (*pistis*), என பவுல் சொன்னது “பரிசுத்தவான்களுக்கு ஒரு விசை ஒப்புக் கொடுக்கப்பட்ட விசுவாசத்திற்காக” (யூதா 3), அதாவது கிறிஸ்தவ மார்க்கம் என்று அர்த்தப்படுத்தினார். புதிய ஏற்பாட்டில் “விசுவாசம்” என்பது இந்த வகையில் தான் பெரும்பாலும் பயன்படுத்தப்பட்டுள்ளது. பெயர்ச்சொல் லுக்கு முன்பு சுட்டுச்சொல் தெளிவானதாய்க் குறிப்பிடப்பட்டது (காண்க நடபடிகள் 6:7; 13:8; 14:22; கலாத்தியர் 1:23; 6:10) பிலிப்பியர் 1:27ல், பவுல் “விசுவாசத்தை” “சுவிசேஷம்” என்று அடையாளப்படுத்தினார். சபைக்கு சபைக்கென தேவன் கொடுத்த செய்தி, புதிய ஏற்பாடு நிறைவு பெற்றபோது ஒருமைப்பட்டது; ஆகையால் விசுவாசத்தின் ஒருமைப்பாடு அடையப்படும்.

சபையானது தேவனுடைய குமாரனை அறிகிற அறிவின் ஒருமைப்பாட்டை அடையவேண்டும். மீண்டுமாக, கிறிஸ்துவைப் பற்றி சபை அறிய வேண்டிய எல்லாவற்றையும் முழுமையடைந்த புதிய ஏற்பாடு வழங்கும். புதிய ஏற்பாடு முழுமையாக எழுதப்பட்டு, ஒழுங்குபடுத்தப்பட்ட போது, எல்லா காலத்திற்குமாக “அந்த விசுவாசம்” மற்றும் “அந்த அறிவு” சபைக்கு வெளிப்படுத்தப்படும்.

சபையானது பூரணமடைகிற, **பூரண புருஷராகும் போது** என்ற சாராம்ஸத்தில், ஒருமையை அடைய வேண்டும். “பூரணம்” (*teleios*) என்பது “பரிபூரணம்” அல்லது “முழுமை” என பொருள்படும்.[19] மேலும், டெலியோன் என்பது “ஒரு முழு மனுஷனாக முதிர்வு அடைவதை குறிக்கும், ... குழந்தைப் பருவத்துக்கு முரணானது இது”; “பாவமில்லாத” (*anamartētos*) என்று அர்த்தப்படும் பரிபூரணத்தைக்குறிப்பதாக குழப்பமடைந்து விடக்கூடாது.[20] பவுல் இங்கே தனிப்பட்ட சபை அங்கத்தினர்களைக்குறித்து எதுவும் பேசுவதில்லை, மாறாக உலகளாவிய சபையைக் குறித்தே பேசுகிறார். “நாம் எல்லாரும்” என்று முன்பு ஒருமுறை குறிப்பிட்டார் - அதாவது, முழு சபையையும், அதின் தேவனால் வெளிப்படுத்தப்பட்ட வளர்ச்சியை,

*மேற்கொண்டு அற்புத வரங்கள் எதுவும் அவசியப்படாத முழுமை அடைவதைக் குறிக்கிறது.*

***கிறிஸ்துவினுடைய நிறைவான வளர்ச்சியின் அளவுக்குத்தக்க என்பது "பூரணப் புருஷனின்" வளர்ச்சி இப்பொழுதுதான் குறிப்பிடப்பட்டது.*** *சபையை பவுல் "ஒரே புதிய மனுஷனாக" 2:15லும் "கிறிஸ்துவின் நிறைவு" குறித்து 1:23லும் ஒப்பிட்டு விளக்கமளித்தார். இந்த "நிறைவு" பெற்ற "வளர்ச்சி," ஒரு முழுமை பெற்ற வெளிப்பாட்டைக் கொண்டது, சபை என்னவாக இருக்க வேண்டுமென்று முற்பட்டதோ, அதாவது, "கிறிஸ்துவின் நிறைவுக்குத்தக்கதாக" சபை வளரும்படி எதிர்பார்த்தபடி முழுமையைப் பெற்றது. இந்த "நிறைவு" ஆரம்பத்திலிருந்தே தேவனுடைய திட்டமாக இருந்தது (காண்க 1:23; 3:11). சபைக்கு நிறைவு பெற்ற புதிய ஏற்பாடு கிடைத்தபோது அற்புத வரங்கள் அதற்குத் தேவைப்படவில்லை, அது தன்னுடைய வளர்ச்சியை அல்லது பூரண புருஷத்தன்மையை அடைந்தது.*

### *சரீரத்தில் தனிப்பட்ட (ஒவ்வொரு) அங்கத்தினரின் வளர்ச்சி (4:14-16)*

***[14]நாம் இனிக் குழந்தைகளாயிராமல், மனுஷருடைய சூதும் வஞ்சிக்கிறதற்கேதுவான தந்திரமுள்ள போதகமாகிய பலவித காற்றினாலே அலைகளைப் போல அடிபட்டு அலைகிறவர்களாயிராமல், [15]அன்புடன் சத்தியத்தைக் கைக் கொண்டு தலையாகிய கிறிஸ்துவுக்குள் எல்லாவற்றிலேயும் நாம் வளருகிறவர்களாயிருக்கும்படியாக அப்படிச் செய்தார். [16]அவராலே சரீரம் முழுவதும், அதற்கு உதவியாயிருக்கிற சகல கணுக்களினாலும் இசைவாய்க் கூட்டி இணைக்கப்பட்டு, ஒவ்வொரு அவயவமும் தன்தன் அளவுக்குத் தக்கதாய் கிரியை செய்கிறபடியே, அது அன்பினாலே தனக்குப் பக்திவிருத்தி உண்டாக்குகிறதற்கேதுவாகச் சரீரவளர்ச்சியை உண்டாக்குகிறது.***

***வசனம் 14.*** *முழுவளர்ச்சியைப் பெற்றிராத குழந்தைப் பருவ சபைக்கு பவுல் எழுதிய போதும், அவர்,* ***நாம் இனிக் குழந்தைகளாயிராமல், மனுஷருடைய சூதும் தந்திரமுமுள்ள போதகமாகிய பலவித காற்றினாலே அலைகளைப் போல அடிபட்டு அலைகிறவர்களாயிராமல்*** *என்று சொன்னார். எது உண்மையான போதனை எது உண்மையானதல்ல என்பதை சபையார் எப்படி அறிந்திருக்க முடியும்? சபை தனது குழந்தைப்பருவத்தில் பெற்றிருந்த ஆவிக்குரிய வரங்களில் ஒன்று "ஆவிகளைப் பகுத்தறிதல்" (1 கொரிந்தியர் 12:10) அது சத்தியத்தையும் சத்தியமல்லாததையும் பகுத்துப் பார்க்க உதவியது. புதிய ஏற்பாட்டின் நிறைவு, வசனமே சத்தியத்திலிருந்து அசத்தியத்தைப் பிரித்துபார்க்கும் அளவு கோல்.*

*பவுல் இந்தக் கோட்பாட்டை பிலிப்பியரில் பேசினார்:*

> *நான் அடைந்தாயிற்று, அல்லது முற்றும் தேறினவனானேன் என்று எண்ணாமல், கிறிஸ்து இயேசுவினால் நான் எதற்காகப் பிடிக்கப்பட்டேனோ அதை நான் பிடித்துக் கொள்ளும்படி ஆசையாய்த் தொடர்கிறேன். சகோதரரே, அதைப் பிடித்துக் கொண்டேன் என்று*

*நான் எண்ணுகிறதில்லை; ஒன்று செய்கிறேன், பின்னானவைகளை மறந்து, முன்னானவைகளை நாடி, கிறிஸ்து இயேசுக்குள் தேவன் அழைத்த பரம அழைப்பின் பந்தயப் பொருளுக்காக இலக்கை நோக்கித் தொடருகிறேன். ஆகையால் நம்மில் தேறினவர்கள் யாவரும் இந்தச் சிந்தையாயிருக்கக் கடவோம்; எந்தக் காரியத்திலாவது நீங்கள் வேறே சிந்தையாயிருந்தால், அதையும் தேவன் உங்களுக்கு வெளிப்படுத்துவார் (பிலிப்பியர் 3:12-15).*

*புதிய ஏற்பாடு அமலுக்கு வந்தபோது, சபை "ஏற்கனவே" வளர்ச்சியடைந்திருந்தது, ஆகிலும் அநேக தனிப்பட்ட அங்கத்தினர்கள் இன்னும் "வளர்ச்சியடைந்திருக்க வில்லை."*

சபையின் வளர்ச்சியைக் குறித்து பவுல் பேசின போது, ஒருமையில் "பூரண புருஷன்" என்ற சொற்றொடரையே பயன்படுத்தினார், ஆனால் சபையின் அங்கத்தினர்களைக் குறித்துப் பேசும்போது பன்மைச் சொல்லாகிய "குழந்தைகள்" என்ற வார்த்தையைப் பயன்படுத்தினார். வளர்ச்சியடைந்த கிறிஸ்தவன் சத்தியத்தை அறிந்திருக்கிறபடியால் காற்றினால் அலைகழிக்கப்படுகிற படகைப் போல் இல்லாமல், கள்ள உபதேசங்களால் எதிர்காற்றினாலே செல்லுகிற இலக்கை விட்டுப் போய் விடாமலிருப்பார்கள்.

கள்ளப் போதகர்கள் சபையின் ஆரம்பகாலத்தில் இருந்தார்கள், பவுல் அவர்களைக்குறித்து எச்சரித்தார், நேர்மையற்றவர்களும் திறமை மிக்கவர்களும் மதிநுட்பம் உடையவர்களாயுமிருந்து **வளர்ச்சியற்ற கிறிஸ்தவர்களை அவர்கள் தங்களுக்கு வசமாக்கிக் கொள்ள வகைதேடி சூதும் வஞ்சிக்கிறதற்கேதுவான தந்திரமுள்ள போதகர்களுமாயிருந்தார்கள்.** இந்தக் கள்ளப்போதகர்கள் சாத்தானுடைய கருவிகளாயிருந்து, அவன் பயன்படுத்தும் வஞ்சகங்களையும் தந்திரங்களையும், மோசம் போக்குதலையும் சூழ்ச்சிகளையும் செயல்படுத்தினார்கள் (காண்க யோவான் 8:44; 2 கொரிந்தியர் 2:11; 11:3; எபேசியர் 6:11; 1 தீமோத்தேயு 4:1). அவர்கள் பவுலுக்கும் அவருடைய உபதேசங்களுக்கும் முரண்பட்டவர்களாயிருந்தார்கள், புதிய ஏற்பாடு பூர்த்தியானபோது அதின் செய்தியைக்குறித்து வாக்குவாதம் பண்ணுகிறவர்களாயிருந்தார்கள். கள்ள உபதேசம் தவறைக் கொண்டுவந்தது, எபேசு கிறிஸ்தவர்களுக்கு பவுல் கொடுத்த நச்சு முறிவு மருந்து என்பது கிறிஸ்துவுக்குள் இருக்கிற சத்தியத்தில் வளர்ச்சியடையவும் (4:21) மற்றும் சத்தியத்தைப் பேசவும் செய்ததுதான் (4:15).

***வசனம் 15.*** முதலாவதாக, இந்த கிறிஸ்தவர்கள் என்ன செய்ய வேண்டும் என்பதற்கும் கள்ளப் போதகர்கள் என்ன செய்து கொண்டிருந்தார்கள் என்பதற்குமிடையேயுள்ள வேறுபாடு இதிலே காணுகிறது: **அன்பினாலே சத்தியத்தைக் கைக்கொண்டு.** இதில் காணும் "சத்தியம்" இதற்கு முந்தைய வசனத்தில் விவரிக்கப்படுகிற கள்ள உபதேசங்களுக்கு எதிரானது, மேலும் அன்பு "தந்திரத்திற்கு" எதிரானது. "சத்தியம்" என்பது எபேசியர்கள் கேட்டு விசுவாசித்ததாக இருந்தது: அது இரட்சிப்பின் சுவிசேஷம் (1:13). சத்தியத்தை ஏற்றுக் கொண்டுள்ளதால் "அன்புடன்" சத்தியத்தை அவர்கள் பேசவேண்டியவர்களாயிருந்தார்கள். இந்த வகையில் போதிக்கப்பட்டவர்களும் போதனையை செய்தவர்களுமாகிய இருசாராரும் கிறிஸ்துவுக்குள்ளான

வளர்ச்சியில் வளரமுடியும். சத்தியம் எப்பேழுதுமே "அன்புடன்" பேசப்பட வேண்டும், ஆனால் தவறுகள் ஒருபோதும் மேட்டிமையுடன் அறிவிக்கப்படக் கூடாது. அன்புடன் சத்தியத்தை பேசுவது தவறான உபதேசத்தின் மேல் வெற்றிகொள்ளும் மற்றும் சபையை எண்ணிக்கையிலும் ஆவிக்குரிய ரீதியிலும் தொடர்ந்து வளர்ச்சிபெற உறுதியளிக்கும். இந்த விளக்கம் சபையைக் குறித்து பவுல் சொன்ன சபையை வளர்ச்சியடைகிற ஒரு கட்டிடத்துடன் ஒப்பிடுவது நன்கு பொருந்துகிறது (காண்க 2:20, 21).

அடுத்ததாக, அவர் எழுதினார், **தலையாகிய கிறிஸ்துவுக்குள் *எல்லாவற்றிலேயும்,* நாம் வளருகிறவர்களாயிருக்கும்படியாக அப்படிச் செய்தார்** (வலியுறுத்துதல் சேர்க்கப்பட்டது). சபை வாழ்வின் எல்லா பகுதிகளிலும், தேவன் தமது நித்தியதிட்டத்தில் கொண்டிருந்த தீர்மானத்தின் சபைக்குள் அங்கத்தினர்கள் வளருகிறவர்களாயிருக்க வேண்டும் (காண்க 3:9, 10). கிறிஸ்துவு "க்குள்" (*eis*) என்பது "சபையின் அங்கத்தினர்கள் வளர்ச்சிக்கு" "தலையாகிய கிறிஸ்துவே" "*முடிவும் பொருளுமாயிருக்கிறார்*" என்று சுட்டிக்காட்டுகிறது.[21] கிறிஸ்தவர்கள் கிறிஸ்துவின் சாயலுக்குள் வளர வேண்டும் என்பது பவுலின் வலியுறுத்தல் அல்ல (இந்த உண்மை வசனங்களில் நன்கு சாட்சியளிக்கப்பட்ட ஒன்று - ரோமர் 8:29; 2 கொரிந்தியர் 3:18; பிலிப்பியர் 2:5; 1 பேதுரு 2:21); மாறாக, அவர் கிறிஸ்துவைக் குறிப்பிட்டு, "அவரே கிருபை அல்லது வல்லமையின் பிறப்பிடமாக இருந்து … நம்மையும் வளருவதற்கு சாத்தியமாக்குவதாக இருக்கிறது" என்றார், மேலும் அவர் நமது வளர்ச்சியின் ஒவ்வொரு தளமும் கவனமாய் பார்த்து வழிகாட்டப்பட வேண்டும்.[22]

**வசனம் 16.** கிறிஸ்துவைத் தலையாகக் குறிப்பிட்டபின், தொடர்ந்து பவுல், **"அவராலே சரீரம் முழுதும், அதற்கு உதவியாயிருக்கிற சகல கணுக்களினாலும், இசைவாய் கூட்டி இணைக்கப் பட்டுள்ளது."** பவுல் தன்னுடைய எழுத்துக்களில் அநேக இடங்களில் சபைக்கு "சரீரம்" என்ற உருவக மொழிப் பதத்தைப் பயன்படுத்துகிறார் (காண்க ரோமர் 12; 1 கொரிந்தியர் 12; கொலோசெயர் 2:19), விசேஷமாக எபேசியரில் (1:22, 23; 4:4, 12). சபையானது அழைக்கப்பட்ட அழைப்புக்குப் பாத்திரராய் ஒருமைப்பாட்டில் நடந்து கொள்ள வேண்டுமானால், இந்த வசனத்தில் பவுல் முன்வைக்கிற சபை வளர்ச்சிக் கோட்பாட்டின் முக்கியத்துவத்தை அது புரிந்து கொள்ள வேண்டும். கிறிஸ்துவின் சரீரம், சபை, தலையாகிய கிறிஸ்துவிடமிருந்து செயலாற்றலுக்கும், வளர்ச்சிக்கும் வேண்டிய வல்லமையைப் பெற்றுக் கொண்டது.

*Sunarmologeō* என்ற கிரேக்க வார்த்தை இசைவாய் "இணைக்கப்பட்டது" என்று மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. இதன் பொருள் "மிக நெருக்கமாய் ஒன்றாக இணைக்கப்பட்டது" என பொருள். நிகழ்காலத் தொடர்ச் சொல்லாக அந்த செயல்முறை தொடர்ந்து நடந்து கொண்டுள்ளது என்பதைச் சுட்டிக் காட்டுகிறது. "இசைவாய் இணைக்கப்பட்டது" (*sumbibazō*), என்பதும் ஒரு நிகழ்காலத் தொடர்ச்சொல்தான், அதன் பொருள் ஒன்றிணைத்தல் அல்லது "பின்னப் பிணைந்து நெருக்கமாக்குதல்" என்று பொருள்.[23] இந்த வார்த்தை "ஒப்புரவாகுதல் என்ற பகுதியில் அதிகமாய் பயன்படுத்தப்படும்" சொல்.[24] முதல் பெயர்ச்சொல் இந்த நிருபத்தின் ஆரம்பத்தில் பவுலால் பயன்படுத்தப்பட்டது, அதில் சபையை ஒரு கட்டிடமாக உருவகப்படுத்திக் காட்டப்பட்டது. கிறிஸ்தவர்கள் கூட்டிக் கட்டப்பட்டு வருகிற கற்களாக, கட்டிடத்தில்

*“இசைவாய் இணைக்கப்பட்டு,” “கர்த்தருக்குள் ஆவியினாலே தேவனுடைய வாசஸ்தலமாகக் கூட்டி கட்டப்பட்டு வருகிறார்கள்” என்று சொன்னார் (2:21, 22). இரண்டாவது தொடர்சொல் பவுலால் கொலோசெயருக்கு எழுதப்பட்டபோது, அவர்கள் “கணுக்களாலும் கட்டுக்களாலும் உதவிபெற்று தேவ வளர்ச்சியாய் வளர்ந்தேறுகிற சரீரமுழுவதையும் ஆதரிக்கிற தலையைப் பற்றிக் கொள்ள” வேண்டுமென்று அவர்களுக்குக் காட்டப்பட்டது (கொலொசேயர் 2:18).*

*“சகல கணுக்களாலும்” (haphē), என்பது “தசைநார்களுடன்” சேர்த்துப் பேசுகிறது (sundesmos). கொலோசெயர் 2:18 ல், சரீரத்தை முழுமையாய் இணைக்கிற அமைப்பைக் குறிப்பிட்டு பேசப்படுகிறது. சரீரம் முழுவதையும் அதன் எலும்புகளையும் தசை நார்களையும் இணைப்பதன் மூலம் தலையாகிய, கிறிஸ்து, ஜீவனையும், பெலனையும், வல்லமையையும் தமது சரீரமாகிய சபை வளர ஏதுவாகக் “கொடுக்கிறார்.”*

***ஒவ்வொரு அவயவமும் தன்தன் அளவுக்குத் தக்கதாய்க் கிரியை செய்கிறபடியே*** *என்று சொல்லி எபேசு சபையிலிருந்த ஒவ்வொரு தனிப்பட்ட அங்கத்தினரும் அவர்களுடைய முக்கியத்துவத்தையும் செயல்களையும் நினைவூட்டினார். வளர்ச்சிக்கு ஏதுவான பெலன் தலையிலிருந்து சரீரம் முழுவதுக்கும் பாய்ந்து வருகிறது. ஆகிலும், சரீரத்தின் சரியான வளர்ச்சிக்குத் தேவை சரீரத்தின் ஒவ்வொரு அவயவமும் பங்கேற்று செயல்பட வேண்டும். ஒவ்வொரு அங்கத்தினரும், வாய்ப்புகளும் தாலந்துகளும் எவ்வளவாய் மட்டுப்படுத்தப்பட்டிருந்தாலும், தன்னை முக்கியமானவர் என்று கருதவேண்டியது அவசியம்.*

*கிறிஸ்து வல்லமையைக் கொடுக்கும்போது, ஒவ்வொரு அங்கத்தினரும் அவன் அல்லது அவள் தன் பங்கைச் செய்யும் போது, இந்த இணைப்பு அன்பினாலே இந்த சரீர வளர்ச்சியை கட்டி உண்டாக்குகிறது. கிறிஸ்துவின் சரீரம் “பக்தி விருத்தி உண்டாக்குகிறதற்கேதுவாக” ஒவ்வொரு அங்கத்தினரும் உழைப்பைக் கொடுக்கின்றனர், இதினால் சபை எண்ணிக்கையிலும் ஆவிக்குரிய வகையிலும் வளர்கிறது. பவுல் மீண்டும் “அன்பை” முக்கியத்துவப்படுத்துகிறார் (4:2, 15). சபையின் செயல்பாடுகளை தனித்துக் காட்டுவது அதுவே. அன்பில்லாமல், சரீரத்தில் உண்மையான வளர்ச்சி உண்டாகாது. அன்புதான் இந்த சரீரத்தின் உயிரோட்டம் கொடுக்கும் இரத்த நாளங்கள், ஆதலால், “சபையின் வளர்ச்சியை மதிப்பீடு செய்ய ஒரு முழுமையான கோட்பாடு அது எவ்வளவு தூரம் அன்பினால் சிறப்பு பெற்றுள்ளது என்பதுதான்.”[25] அன்பே “ஐக்கியத்திற்கான சரியான பிணைப்புச் சங்கிலி” (கொலோசெயர் 3:14).*

*“சரீரம் தன்னுடைய வளர்ச்சிக்கு அன்பினால் செயல்பட வேண்டும்” என்று குறிப்பிட்டபின், பவுல் இந்தப் பகுதியை, “அழைக்கப்பட்ட அழைப்புக்குப் பாத்திரராக எபேசியர் எப்படி நடந்துகொள்ள வேண்டும்” என்று விளங்கப் பண்ணி நிறைவு செய்கிறார் (4:1). அவர்களின் பாத்திரமுள்ள நடக்கை அவர்களுக்குள் இருக்கும் ஐக்கியம் மற்றும் வளர்ச்சி அல்லது அங்கத்தினர்களின் பரிபூரணமடைதலைப் பொறுத்தே சிறப்பிக்கப்படும்.*

# மேலும் கற்றுக் கொள்ள:

**கிறிஸ்தவ சட்டதிட்ட தொகுப்பு:**

*Kanōn*, என்று கிரேக்க மொழியில் சொல்லப்பட்ட ஆங்கில வார்த்தை "கானன்" என்பது, கொத்தனார்கள் அல்லது தச்சர்கள் பயன்படுத்தும் நேர்தன்மையை சோதிக்கும் அடிக்கோல் அல்லது அளவுகோல் என்று பொருள்.[26] முதலாவதாக கி.பி. மூன்றாம் நான்காம் நூற்றாண்டுகளில் வேதாகமம் சம்பந்தப்பட்ட எழுத்தாளர்களான ஆம்ஃபிலியோசியஸ் அல்லது யூசிபியஸ் ஆகியோரால் பயன்படுத்தப் பட்டது.[27] இதற்கு முன், சபையும் அவர்களுக்கு முன்பிருந்த யூத சமுதாயமும் பரிசுத்த எழுத்துக்களை தேவனுடைய வசனங்களாக (*hai graphai*) அல்லது பரிசுத்த வேத எழுத்துக்களாக (*hagiai graphai*) விவரித்தார்கள். இந்தப் பதங்கள் வேதாகமத்தின் தெய்வீக உண்மையின் அதிகாரத்தை குறிப்பிடுபவை.

நாம் பழைய ஏற்பாடு என்று அழைக்கிற ஏவப்பட்ட எழுத்துக்களை அப்போஸ்தலர்களும் இயேசுவும் "மோசேயின் நியாயப்பிரமாணம், தீர்க்கசரிசனங்கள் மற்றும் சங்கீதங்கள்" என்று குறிப்பிட்டனர் (லூக்கா 24:44). தெய்வீகமூலாதாரத்தைக் கொண்ட வசனங்களைப் பற்றிய அவர்களுடைய எண்ணங்களின் சாராம்ஸத்தை 2 தீமோத்தேயு 3:16 மற்றும் 2 பேதுரு 1:19-21 சிறப்பாக விளக்குகின்றன.

E. Earle Ellis [பழைய ஏற்பாட்டுப்] புத்தகங்கள் "குறிப்பிட்ட தெய்வீக அதிகாரத்தைக் கொண்டிருந்த மற்ற யூத குழுக்களுடன் ஆதிக்கிறிஸ்தவ எழுத்துக்கள் மோதல்களுக்கான அடையாளம் எதையும் வெளிப்படுத்தவில்லை என்றார்".[28] கிறிஸ்தவ சட்டதிட்ட தொகுப்பு "canon" என்பது சபையின் பயன்பாட்டில் இன்றைக்கு இருக்கிற பழைய மற்றும் புதிய ஏற்பாடுகளை குறிப்பதற்காக பயன்படுத்தப்பட்ட வார்த்தை அந்த ஏற்பாடுகளை ஒன்றாக உட்படுத்தி கட்டுமானம் பெற்றதே வேதாகமம்?

புதிய ஏற்பாட்டின் எந்த புத்தகங்கள் அந்த கிறிஸ்தவ சட்டதிட்ட தொகுப்பில் இடம் பெற்றவையாக தீர்மானிக்கப்பட வேண்டும் என முடிவு செய்ய ஏதுவாக அடிப்படையில் நான்கு கோட்பாடுகள் சபைக்கு உதவியாக கொடுக்கப்பட்டது:

1. அப்போஸ்தல அதிகாரம் - எழுதப்பட்ட புத்தகம் ஒரு அப்போஸ்தலனாலோ அல்லது ஒரு அப்போஸ்தலனுடன் இருந்த ஒருவரோலோ எழுதப்பட்டதா?
2. பொருளடக்கம் - கொடுக்கப்பட்ட புத்தகம் அப்போஸ்தல புத்தகங்களைப் போலவே சமமான பொருளடக்கம் பெற்றவையா?
3. உகலளாவியது - உலகளாவிய சபையில் புத்தகம் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளதா?
4. ஏவப்படுதல் - அந்த புத்தகம் தெய்வீக ஏவுதலைக் கொண்டது என்பதற்கான ஆதாரம் உண்டா?[29]

இந்த செயல்முறையோடு, தேவனுடைய முழு ஆளுகை அதிகாரத்தின் முன்னளிப்பு உள்ளது என்பதையும் சேர்த்து, தமது

நோக்கத்தை நிறைவேற்றுவதில் தேவன் எப்பொழுதும் கிரியை செய்கிறார் என்ற உண்மையை உட்படுத்திக் கொள்ளலாம். ஆகையால், நாம் பெற்றிருக்க வேண்டும் என்று தேவன் விரும்பியவைகளை மாத்திரமே, சிலவற்றை சேர்த்தோ, அல்லது சிலவற்றை தவிர்த்தோ அவருடைய வசனங்களை தேவன் சரியாகக் கொடுத்திருக்கிறார் என்ற உறுதியான நம்பிக்கையை நாம் கொண்டிருக்கலாம்.

அது ஒரு பகுத்தறிவு ஆவியாக பதினெட்டாம் பத்தொன்பதாம் நூற்றாண்டுகளில் பரிசுத்த எழுத்துக்களின் மதிப்பை கேள்விக்குறிகளோடு நுழைந்து ஆராய்ந்ததன் விளைவு வேதாகமமாக கட்டுமானம் பெற்றது.

## கைக் கொள்ளுதல்

***சபைக்கு தேவனுடைய வரங்கள் (4:7-16)***

*ஆதிச் சபையில், தேவன் தாம் அவர்களிடம் எதிர்பார்த்த பாத்திரராய் நடந்து கொள்ள ஏதுவாக அறிந்து கொள்ளும்படி தேவையானவற்றை விசேஷமாய் முன்னமே ஒழுங்கு செய்திருந்தார். தேவ வசனம் நிறைவு பெற ஏதுவான வெளிப்பாடுகள் தேவையானதால் அப்போஸ்தலர்களும் தீர்க்கதரிசிகளும் அவசியமாயினர், ஆகிலும் அற்புத வல்லமைகளைப் பெற்றுக் கொள்ளுதலும் விரைவில் ஒழிந்து போக வேண்டியதாயிருந்தது. நிரந்தர வரங்களான சுவிசேஷகர்கள், மேய்ப்பர்கள், மற்றும் போதகர்கள் ஆகியோர் எப்பொழுதும் தேவைப்பட்டனர். சபையின் தலைவர்கள் பரிசுத்தவான்களை சீர்பொருந்தப்பண்ணவும், சுவிசேஷ ஊழியத்தைச் செய்யவும். சரீரத்தை பக்திவிருத்தியடையச் செய்யவும் நிறைவுபெற்ற புதிய ஏற்பாட்டை பயன்படுத்துகின்றனர். சபைக்கு தேவன் அளித்த வரங்கள் அங்கத்தினர்களை குழந்தைபருவத்தில் இருந்த சபை அதன் ஆவிக்குரிய குழந்தைப்பருவத்தி லிருந்து புருஷப்பருவத்துக்கு வளர்ந்து சத்தியத்திலிருந்து தவறுகளை வேறுபடுத்தி பார்க்க ஏதுவாக்கியது.*

*சபை அங்கத்தினர்களாகிய அனைவரும் இன்றைக்கு சத்தியத்தைப் பேசவும், அன்பினாலே சத்தியத்தைக் கைக்கொள்ளவும், ஒருவருக்கொருவர் ஊக்கமளித்து உள்ளூர் சபையின் ஊழியத்தின் செயல்பாடுகளில் பங்கேற்கவும் செய்தால், சபை தொடர்ந்து வளர்ந்து நிறைவை அடையும்.*

*ஜெய் லோக்ஹார்ட்*

***சபை எப்படி பரிபூரணமடையமுடியும் (4:7-16)***

*நாம் பூமியில் வாழுகிற வரையில் பாவமற்ற பரிபூரணத்தை எட்டிவிட முடியாது. ஆகிலும், தமது சபை விருத்தியடைந்து "வளர்ச்சி" எனப்படும் பரிபூரணத்தை அடைய இயேசு விரும்புகிறார். கிறிஸ்துவின் சரீரத்தில் இருக்கும் அங்கத்தினர்கள் தேவன் நமக்குக் கொடுத்த கடமைகளை புரிந்து செயல்படுத்தும் போது அதை அடைவது சாத்தியமே. 4:7-16ல், பவுல் குழந்தைப்பருவ சபை அதற்கென திட்டமிட்டபடி எப்படி எல்லாவற்றிலும் வளர முடியும் என்று விளக்கப்படுத்தினார். இன்று, நாம் நமது திறமைகளைப் பயன்படுத்தி வளரவும் மற்றவர்களை ஐக்கியத்திலும், வளர்ச்சியிலும், உறுதி யாய்த் தரித்திருப்பதிலும் வளரச் செய்யவும் வேண்டும்.*

பவுல் அதிரடியாக ஒரு கற்பனையைத் துவங்கினார்: "கிறிஸ்துவினுடைய ஈவின் அளவுக்குத்தக்கதாக நம்மில் அவனவனுக்குக் கிருபை அளிக்கப்பட்டிருக்கிறது. ஆதலால் அவர் உன்னதத்திற்கு ஏறி, சிறைப்பட்டவர்களை சிறையாக்கி, மனுஷர்களுக்கு வரங்களை அளித்தார் என்று சொல்லியிருக்கிறது" (4:7, 8). இந்த வசனத்தின் பின்னணி என்னவெனில் ஒரு பெரிய யுத்தத்திற்குப் பின்பு படைத் தளபதி வெற்றி பெற்று வீடுதிரும்புவது போன்றது, யுத்தம் முடிந்து வெற்றிகிடைத்தாயிற்று, படைத்தளபதியை கனப்படுத்த, இராயன் "வெற்றி விழா" அறிவிப்பை வெளியிடுவான். படைத் தளபதி ரோமாபுரி தெருக்களில் படையோடு அணிவகுத்து செல்லுவார். அவருக்குப் பின்னால் அவருடைய படை வீரர்களும், கடைசியாக யுத்தத்தில் சிறைபிடிக்கப்பட்ட அடிமைகள் வருவார்கள். இந்த ஊர்வலம் நித்திய நகரத்தின் வீதிகளில் வலம் வந்து, ஜனங்கள் யாவரும் ரோம நகர வெற்றிக்களிப்பில்: "வெற்றி! வெற்றி!" என்று சத்தத்துடன் ஆர்ப்பரிப்பார்கள். வெற்றி விழா நிறைவு பெறும் போது, படைத் தளபதி யுத்தத்தில் கொண்டு வந்த கொள்ளை பொருட்களை தனது படை வீரர்களுடன் பகிர்ந்து கொடுப்பான், ஒவ்வொருவனும் அவனவனுக்குரிய வெற்றி வெகுமதிகளைப் (வரங்களை) பெற்றுக்கொள்வான்.

அதே போன்ற காட்சியில், இயேசு வானத்திலிருந்து இறங்கி வந்து தீமையான சக்திகளோடு யுத்தம் பண்ணும் காட்சியை பவுல் விவரித்தார். அது முடிந்தபோது, இயேசு வெற்றி கொண்டார். வெற்றி அவருடையது. பிறகு அவர் நித்திய வீட்டிற்குத் திரும்பப் போனார், அது உண்மையான நித்திய நகரம், தம்மோடே கூட வெற்றியில் கிடைத்த கொள்ளைப் பொருளை எடுத்துச் சென்றார். அங்கே தேவதூதர்களின் ஆர்ப்பரிப்பான சத்தம் "வெற்றி! வெற்றி!" எனும் சத்தம் இயேசு வீட்டிற்கு திரும்பும்போது கேட்கும், தேவனுடைய மிகப் பெரிய சத்துருவை யுத்தத்தில் அவர் ஜெயித்தார்.

இயேசு உன்னதத்திற்கு ஏறிப்போன போது, அவர் மனுஷர்களுக்கு வரங்களை அளித்தார். என பவுல் சொன்னார். அவர் தமது சரீரமாகிய, சபைக்கு விசேஷித்த வரங்களை அளித்தார். இந்த வரங்களெல்லாம் அவருடைய சபையை வளர்ச்சியடையச் செய்யும்படி கொடுக்கப்பட்டது.

*தமது சபைக்கு கிறிஸ்துவின் வரங்கள்* (4:11). வேதாகமம் ஆவிக்குரிய வரங்கள் என்று பேசும்போது, ஜனங்களுக்கு விசேஷித்த திறமைகளை பரிசுத்த ஆவியால் கொடுக்கப்படுவதை வழக்கமாக பேசுகிறது, இங்கேயோ கர்த்தர் வரங்களைக் கொடுப்பது போல் பேசுகிறது. இந்த மனுஷர்களின் திறமைகளல்ல, இந்த மனுஷர்களே அவருடைய சரீரத்துக்கு இயேசுவின் வரங்களாக பவுல் பார்த்தார். சபையை மேம்படுத்த (கட்ட) உதவினவர்களில் அநேக குழுக்கள் பெயரிடப்பட்டன.

முதலாவது வரம் சபைக்குக் கொடுக்கப்பட்டது *அப்போஸ்தலர்களாயிருந்தார்கள்,* அவர்களுடைய செயல்பாடுகள் உயிர்த்தெழுந்த கிறிஸ்துவைக் குறித்து காட்சி கொடுப்பதாக இருந்தது (காண்க நடபடிகள் 1:22). அவர்கள் தெய்வீக ஏவுதலினால் தேவனுடைய சித்தத்தை வெளிப்படுத்தி உயிர்த்தெழுந்த கர்த்தருடைய நாமத்தில் அற்புதங்களைச் செய்து அதை உறுதிப்படுத்தினார்கள்.

அப்போஸ்தலர்களுக்கு உதவியாயிருந்தவர்கள் *தீர்க்கதரிசிகள்.* இவர்கள் தேவனால் அருளப்பட்ட கிறிஸ்தவர்கள், இவர்கள் தேவனுடைய சித்தத்தை

சபைக்குத் தெரியப்படுத்தி போதியளவுக்கு எழுதப்பட்ட பதிவேடுகள் இல்லாத அந்த நாட்களில் உதவிகரமாயிருந்தார்கள். அவர்கள் உயிர்த்தெழுந்த இயேசுவை பார்த்திருக்க வேண்டிய அவசியமிருக்கவில்லை, அதே நேரத்தில் அவர்கள் எவ்வித அற்புதத்தையும் செய்திருப்பதாக நம்மால் நிரூபிக்கவும் இயலாது. இருப்பினும், அவர்களுடைய ஊழியம் ஆதிசபையிலே பிரச்சனைகள் எழும்போது தீர்வு காணும் அவசியமும் ஏற்பட்டது, என்ன செய்ய வேண்டும் என்று சபையை தீர்க்கதரிசிகள் வழி நடத்தினார்கள்.

பவுலின் முந்தைய சாட்சியத்தின்படி (காண்க 2:19, 20), நாம் தேவனுடைய வீட்டாராக இருக்கிறோம், "அப்போஸ்தலர் தீர்க்கதரிசிகள் என்பவர் களுடைய அஸ்தி பாரத்தின் மேல் கட்டப்பட்டவர்களுமாயிருக்கிறோம்; அதற்கு இயேசு கிறிஸ்து தாமே மூலைக்கல்லாயிருக்கிறார்"; கிறிஸ்துவின் சரீரத்தின் வளர்ச்சிக்கு அப்போஸ்தலர்கள் தீர்க்கதரிசிகள் ஆகியோரின் ஊழியம் முற்றிலும் அவசியமானதாக இருந்தது. வேதாகமத்தின் அர்த்தத்தின்படி இனியும் அப்போஸ்தலர்களோ தீர்க்கதரிசிகளோ இல்லாதபடியால், அவர்களுடைய பணிகளாகிய பரிசுத்தவான்களை பரிபூரணமாக்கும் ஊழியம் எழுதப்பட்ட பதிவேடுகள் மூலம் தொடர்கிறது. நாம் அறிய வேண்டும் என்று அவர்கள் விரும்பின அனைத்தும், அவர்களால் கொடுக்க இயன்ற அனைத்து சாட்சியங்களும், நமக்காக தேவனுடைய வசனத்தில் பதிவு செய்யப் பட்டுள்ளன. சபைக்கு வரங்களாகக் கொடுக்கப்பட்ட இவர்கள் இந்த தனிப்பட்ட நபர்களின் பயனாக அவர்களுடைய உபதேசத்தை நாம் வேதாகமத்தில் வாசிக்கிறபடியால் அவர்கள் இன்னும் தொடர்ந்து வாழ்ந்து கொண்டுள்ளனர்.

இயேசு தாமே மூன்றாவதாக தமது சபைக்குக் கொடுத்த வரம் *சுவிசேஷகர்கள்.* "நற்செய்தியை சுமந்து கொண்டு போகிறவர்களாகிய இவர்கள்," உண்மையில், இந்த மனுஷர்கள் தங்கள் ஆத்துமாவை இழந்த மக்களுக்காக தேவன் கல்வாரிச் சிலுவையிலே நிறைவேற்றியவைகளை சமுதாயம் விட்டு சமுதாயத்திடம் பயணம் பண்ணிச் சொன்னார்கள். சரீரத்தில் இருக்கிற ஒவ்வொரு அங்கத்தினரும் தங்களிலுள்ள விசுவாசத்தை மற்றவர்களோடு பகிர்ந்து கொள்ளும்படி கட்டளை கொடுக்கப்பட்டிருந்த போதிலும் தேவன் தமது சபையில் குறிப்பிட்ட மனுஷர்கள் சுவிசேஷகர்களாக ஊழியஞ் செய்யக் கொடுத்திருக்கிறார். அப்போஸ்தலர்களும் தீர்க்கதரிசிகளும் தேவனுடைய சத்தியத்தை வெளிப்படுத்தியதன் மூலம் அஸ்திபாரத்தைப் போட்டு விட்டார்கள்; யுகங்களினூடே சுவிசேஷகர்கள் ஜனங்களை சத்தியத்தின் மூலம் இயேசுவிடம் ஆதாயப்படுத்தி அந்த அஸ்திபாரத்தின் மேல் கட்டி எழுப்பிக் கொண்டுள்ளனர்.

சரீரத்துக்கு இயேசு *மேய்ப்பர்களையும் போதகர்களையும்* கூட கொடுத்திருக்கிறார். சுவிசேஷகர்கள் இடம் விட்டு இடம் சென்று ஜனங்களை இயேசுவிடமாய் மனமாற்றி வரும் வேளையில், மேய்ப்பர்களும் போதகர்களும் ஒரே இடத்தில் இருந்து கொண்டே புதிதாய் மனமாற்றப்பட்டவர்களை அவர்களுடைய புதிய விசுவாசக் காலத்தில் போஷித்து வழிநடத்துகிறார்கள்.

இந்த வரங்களின் நோக்கங்களின் தொகுப்பு - அப்போஸ்தலர்கள், தீர்க்கதரிசிகள், சுவிசேஷர்கள், மேய்ப்பர்களும் போதகர்களும் - இரண்டே வார்த்தைகளில் சுருக்கமாகச் சொல்லலாம்: "சத்தியத்தை அறிவிப்பவர்கள்!"

*இது "பரிசுத்தவான்களை சீர்பொருந்தச் செய்யும் பொருட்டு" இருந்தது (4:12). வசனத்தை பிரசங்கிக்க இந்த மனுஷர்கள் இல்லாமற் போனால், சபை தனது நிறைவை அடைந்திருக்க முடியாது. இன்று, சுவிசேஷகர்கள், மேய்ப்பர்கள், மற்றும் போதகர்கள் சத்தியத்தைப் பரப்புவதில் முக்கியமாக நிலைத்திருக்கிறார்கள்.*

*சபைக்கு கிறிஸ்து கொடுத்திருக்கும் இந்த மனுஷர்கள் ஊழியத்தின் முழுப்பணியை செய்வதில்லை. அவர்களுக்குக் கொடுக்கப்பட்ட பணிப்பொறுப்பு பரிசுத்தவான்களுக்கு தேவனுடைய சித்தத்தைப் போதிக்க வேண்டும், அதினால் பரிசுத்தவான்கள் சபையின் பணியை செய்வார்கள். "பரிசுத்தவான்கள் சீர்பொருந்தும் பொருட்டு" (வேலை செய்யும் பொருட்டு) சுவிசேஷத்தின் வேலைக்காக ஆயத்தப்படுத்த வேண்டும் (4:12). "ஏன் பரிசுத்தவான்கள் இந்த ஊழியத்தைச் செய்ய வேண்டும்?" "கிறிஸ்துவின் சரீரம் கட்டப்பட வேண்டும்" (பக்தி விருத்தியடைய) (4:12).*

*அவருடைய சபைக்கான இலக்குகள் (4:13). இவையெல்லா வற்றிலும் கிறிஸ்துவுக்கு ஒரு நோக்கமிருந்தது. அங்கத்தினர்கள் சரீரத்தின் உயிரோட்டத்தில் குறிப்பிட்ட காரணங்களுக்காக செயல்பட வேண்டுமென்று அவர் விரும்பினார். தேவனுடைய ஜனங்கள் அவருடைய சத்தியத்தில் முறையாக பயிற்சி அளிக்கப்படும் போது அவர்கள் சத்தியத்தின்படி செயல்படும்போது மூன்று விளைவுகள் நிகழ்கின்றன.*

*(1) ஐக்கியம். சரீரத்துக்கு கிறிஸ்துவின் முதலாவது இலக்கு விசுவாச ஒற்றுமை. பவுல் ஏற்கனவே "ஒரே விசுவாசம்" என்று எழுதினார் (4:5), ஆகிலும் இந்தக் கொள்ளையில் அடங்கியுள்ளவைகளை எல்லாரும் பற்றிக் கொள்வதில்லை. வசனம் அறிவிக்கப்படுவதைக் கேட்கும் சபை, ஒரு முழுமை யான ஒற்றுமையை நோக்கி நகர்ந்து கிறிஸ்துவைக் குறித்த முழுமையான புரிந்து கொள்ளுதலை அடிப்படையாகக் கொண்டு முன்னேறுகிறது.*

*(2) வளர்ச்சி. இரண்டாவது இலக்கு பரிசுத்தவான்களைத் தகுதிபடுத்தி அவர்கள் வளரும்படி செய்வது. பவுல் இந்த வளர்ச்சியை விளக்கப்படுத்தி "கிறிஸ்துவினுடைய நிறைவான வளர்ச்சியின் அளவுக்குத் தக்க பூரணப் புருஷராகுதலைக் குறிப்பிடுகிறார்." வளர்ச்சியற்ற ஜனங்கள் தங்களைச் சுற்றியே பார்த்துக் கொள்வார்கள். அவர்கள் தங்களுடைய சொந்த தேவைகளையே தேடுவார்கள். சத்தியத்தில் வளருகிற கிறிஸ்தவர்கள் மேலும்மேலும் கிறிஸ்துவைப் போலாகிறார்கள்.*

*ஒரு குழந்தை தனக்குத்தானே போஷித்துக் கொள்ள இயலாது. அவனுடைய கைகளும் அவனுடைய வாயும் ஒத்துழைக்காது. அவன் தவழ்ந்து செல்லவோ அல்லது நடக்கவோ இயலாது, ஏனெனில் அவனுடைய கைகளும் கால்களும் ஒன்றாக செயல்பட வைப்பது எப்படி என்று அவனுக்குத் தெரியாது. காலஞ்செல்லச் செல்ல, கைகளும் கால்களும், வாயும். மற்றும் கண்களும் ஆகிய அனைத்தும் ஒன்றாக மேலும் மேலும் தேவன் அவைகள் செயல்பட திட்டமிட்டபடி செயல்படும்.*

*சபையிலும் அப்படித்தான். ஒவ்வொரு அங்கத்தினரும் சரீரத்தில் தனது கடமைகளை கண்டு பிடிக்கும் போது அந்தச் செயல்களைச் செய்ய துவங்குகின்றனர், சத்தியத்தின் மாதிரியில் மற்றவர்களுக்கு ஊழியஞ் செய்கின்றனர், அவன் சரீரத்தின் வளர்ச்சிக்கு உதவுகிறான்.*

*(3) உறுதியாகத் தரித்திருத்தல்.* குழந்தைகள் பகுத்துப் பார்க்க அறியாதவர்கள். நல்லது எது கெட்டது எது என்ற வேறுபாட்டை அறியாதவர்கள் அவர்கள். பெற்றோர் ஒரு சிறு குழந்தையை கவனிக்காமல் விட்டால், தரையிலே கிடக்கிற எதையும் அவன் தன் வாய்க்குள் எடுத்துப் போட்டுக் கொள்வான். பகுத்தறிவு அவனுக்குக் குறைவுபடுகிறது.

எபேசியர்கள் அப்படி இருக்கலாகாது என்று பவுல் சொன்னார்: அதன் விளைவாக "நாம் இனி குழந்தைகளாயிராமல், மனுஷருடைய சூதும் வஞ்சிக்கிறதற்கேதுவான தந்திரமுமுள்ள போதகமாகிய பலவிதக் காற்றினாலே அலைகளைப்போல அடிப்பட்டு அலைகிறவர்களாயிராமல்" (4:14) இருக்க வேண்டும். வளர்ச்சியடைந்த கிறிஸ்தவர்கள் தோன்றிக் கொண்டுள்ள ஒவ்வொரு மதரீதியான இயக்கங்களிலும் சிக்கிக் கொள்ள மாட்டார்கள். மாறாக, அவர்கள் (ஏற்கனவே) விசுவாசித்திருக்கிறவைகள் மனதில் ஊன்றி நின்று உறுதியாய்த் தரித்திருக்கச் செய்யும்.

ஒரு உள்ளூர் சபை எவ்வகையில் இப்படிப்பட்ட உறுதியாய்த் தரித்திருத்தலைப் பெற முடியும்? பரிசுத்தவான்கள் தொடர்ந்து தேவனுடைய வசனத்தில் போதிக்கப்பட்டு சுவிசேஷ ஊழியத்தின் வேலையைச் செய்ய ஆயத்தப்படுத்தப்படுவதில்தான். பிறகு அவர்கள் பெற்றுக் கொண்ட உபதேசங்களை நடைமுறைப்படுத்துவார்கள். இதன் விளைவு அவர்கள் தங்களுடைய மனதில் கொண்டுள்ள திடநம்பிக்கையில் நன்கு வேர்பிடித்துக் கொள்வார்கள்.

*அவருடைய சபையின் வளர்ச்சி* (4:15, 16). சரீரம் வளர்ந்தேறலாம். சபை நிறைவடையலாம். சரீரத்தில் உள்ள அங்கத்தினர்கள் ஒவ்வொருவரும் வசனத்தைக் கேட்டு அதன்படி செயல்படும் போது அது நடக்கிறது, ஒவ்வொரு அங்கத்தினரும் மற்ற அங்கத்தினருக்கும் ஊழியம் செய்கிறபோது, தேவன் அவனுக்குக் கொடுத்ததைச் செய்யும் போது அது சாத்தியமாகிறது. இவைகளெல்லாம் இடம்பெறும் போது, முடிவின் விளைவு வளர்ச்சி. ஒவ்வொரு அங்கத்தினருடைய வாழ்விலும் ஆவிக்குரிய அபிவிருத்தியைக் காணக்கூடும். கிறிஸ்து அந்த வளர்ச்சிக்கான மூலக்காரணி.

*முடிவுரை.* பவுல் இங்கே பேசுகிற சரீரத்தின் வளர்ச்சியும் நிறைவும் எண்ணிக்கையில் அதிகரிப்பதோடு சம்பந்தப்பட்டதல்ல. ஏனெனில் பவுலைப் பொறுத்தமட்டில் ஆரோக்கியமாக, வளருகிற சபையின் ஒவ்வொரு மனமாற்றப்பட்ட நபரும் சரீரத்தின் உயிரோட்டத்தில் தன்னை உட்படுத்தி தேவனுடைய வசனத்தின்படி தன்னிடத்தில் என்ன இருக்கிறதோ அதைப் பிற கிறிஸ்தவர்களோடு பகிர்ந்து கொள்வதில் பயன்படுத்துகிறான். இது இடம் பெறும் போது, ஆவிக்குரிய சீதோஷ்ண நிலை கிறிஸ்தவர்களல்லாதவர்களையும் ஈர்த்து இப்படி அநேகர் இரட்சிக்கப்படுவார்கள், கர்த்தரால் சபையில் சேர்த்துக் கொள்ளப்படவும் செய்வார்கள்.

கிறிஸ் புல்லார்ட்

**பாத்திரமான எண்ணங்கள் (4:1-16)**

4:1-16ல், பவுல் எபேசியர்கள் தாங்கள் அழைக்கப்பட்ட அழைப்புக்குப் பாத்திரராய் நடந்து கொள்ள மூன்று வழிகளை வலியுறுத்தினார், அதே வழி காட்டல் ஊழியம் செய்கிற நமக்கும் "சமாதானக் கட்டினால் ஆவியின்

ஒருமைப்பாட்டைக் காத்துக் கொள்ள” உதவும். முதலாவதாக, நமக்குநாமே கொண்டிருக்கிற எண்ணம் - தாழ்மை (4:2). இரண்டாவதாக, மற்றவர்களைக் குறித்து நாம் கொண்டிருக்கிற எண்ணம் - சாந்தம், நீடிய பொறுமையுடன், ஒருவரையொருவர் அன்பினால் தாங்குகிறவர்களாயிருக்க வேண்டும் (4:2). மூன்றாவதாக, தேவனுடைய வசனத்தைக் குறித்த நமது எண்ணம் - மரியாதை செலுத்துதல். நாம் விசுவாசிப்பது எதுவோ கைக்கொள்வது எதுவோ அவைகளின் வசன அதிகாரத்தை ஏற்றுக் கொண்டிருக்க வேண்டும் (4:4-16).

அதிகாரம் 4 நமது அழைப்புக்குப் பாத்திரராய் நடந்து கொள்வதில் வெற்றிபெறுவது எப்படி என்பதைச் சொல்லுகிறது. நாம் “ஐக்கியத்திற்கான ஏழு தூண்களையும்” கனப்படுத்த வேண்டும் (4:4-6), மேலும் சபைக்கு உதவி செய்யும்படியாக “விசுவாசத்தின் ஒருமையைக் காத்துக்கொள்ள” கிறிஸ்து கொடுத்த வரங்களை பயன்படுத்திக் கொள்ள வேண்டும் (4:7-13). தொடர்ந்து, நாம் தேவனுடைய வசனத்தில் வளர்ச்சிபெற வேண்டும், அதினால் நாம் சத்தியத்தை அறிந்தவர்களாவோம் (4:14), மற்றும் நாம் அன்பினாலே அந்த சத்தியத்தைப் பேசவேண்டும் (4:5). நாம் தனிப்பட்ட ரீதியில் நமது பகுதியைச் செய்கிற போது, நம்மில் ஒவ்வொருவரும் சரீரமாகிய சபை, பக்தி விருத்தியில் வளர உதவிகரமாய் இருக்கும் போது “அது தன்னில் தானே அன்பிலே” பக்தியை அடையும் (4:16).

ஜெய் லோக்ஹார்ட்

---

குறிப்புகள்

[1]Ethelbert W. Bullinger, *A Critical Lexicon and Concordance to the English and Greek New Testament* (London: Samuel Bagster and Sons, n.d.; reprint, Grand Rapids, Mich.: Zondervan Publishing House, Regency Reference Library, 1975), 888. [2]Ibid. [3]டார்க்கம்ஸ் என்பது அராமிக் மொழிப்பெயர்ப்புகள் மற்றும் யூதர்களுக்கான எபிரெய வசனங்களின் விளக்கவுரைகள், இந்த யூதர்களின் தாய்மொழியாக அந்நேரத்தில் எபிரெய மெ ாழி இருக்கவில்லை. [4]Andrew T. Lincoln, *Ephesians,* Word Biblical Commentary, vol. 42 (Dallas: Word Books, 1990), 242–43. [5]S. D. F. Salmond, “The Epistle to the Ephesians,” in *The Expositor's Greek Testament,* ed. W. Robertson Nicoll (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1967), 3:325. [6]Spiros Zodhiates, ed., *The Complete Word Study New Testament,* 2d ed. (Chattanooga, Tenn.: AMG Publishers, 1991), 907; see also Walter Bauer, *A Greek-English Lexicon of the New Testament and Other Early Christian Literature,* 3d ed., rev. and ed. Frederick William Danker (Chicago: University of Chicago Press, 2000), 259. [7]Lincoln, 247. [8]Zodhiates, 891. [9]Bullinger, 607. [10]Zodhiates, 952. [11]Bullinger, 257. [12]Ibid., 339. [13]Ibid., 246. [14]Lincoln, 250. [15]அப்போல்லோ, ஆக்கில்லா மற்றும் பிரிஸ்கில்லா, தீகிக்கு, எப்பாபிரா மற்றும் அர்க்கிப்பு ஆகியோரை பரிசீலியுங்கள் (நடபடிகள் 18:24-28; கொலோசெயர் 1:7; 4:7, 12, 17). [16]Bullinger, 580. [17]Ibid., 244. [18]Bauer, 696. [19]Bauer, 995. [20]Zodhiates, 886. [21]Salmond, 336. [22]Ibid. [23]Kenneth S. Wuest, *Wuest's Word Studies from the Greek New Testament for the English Reader: Ephesians and Colossians* (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1953), 104. [24]Lincoln, 262. [25]Ibid., 264. [26]Henry Clarence Thiessen, *Introduction to the New Testamen*t (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1943), 3. [27]E. Earle Ellis, *The Old Testament in Early Christianity: Canon and Interpretation in the Light of Modern Research* (Grand Rapids, Mich.: Baker Book House, 1991), 3. [28]Ibid., 7. [29]Thiessen, 10.